


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 250 22.04.2026 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 250 Wednesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

புதன்கிழமை
(22-04-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-9
பிறை: வளர்பிறை
திதி
பஞ்சமிகாலை 6.24 வரை பிறகு சஷ்டி பின்னிரவு 3.38 வரைபிறகு சப்தமி.
நட்சத்திரம்:
திருவாதிரை பின்னிரவு 3.02 வரைபிறகு புனர்பூசம்.
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
பிற்பகல் 12.00-1.30 மணி
எமகண்டம்
காலை 7.30-9.00 மணி.
சூலம் - வடக்கு.

நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 4-5 மணி.

மேஷம் ................ பாராட்டு
ரிஷபம் ..................... நலம்
மிதுனம் ..................... நலம்
கடகம் ....................... நட்பு
சிம்மம் ...................... பரிசு
கன்னி ....................சாந்தம்
துலாம் ...................கீர்த்தி
விருச்சிகம் ............. உதவி
தனுசு ....................போட்டி
மகரம் ................. ஆர்வம்
கும்பம் .....................பக்தி
மீனம் .....................அன்பு

# தமிழ்நாட்டை வஞ்சிக்க நினைப்போருக்கு நான் என்றுமே டேஞ்சர் தான்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஏப்.22:**

தமிழகத்தில் அனல் பறக்கும் பிரசாரம் ஓய்கிறது. கருத்துக்கணிப்பு வெளியிடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டமன்றத்திற்கான தேர்தல் நாளை (23-ம் தேதி) நடைபெறவுள்ளது. இதையடுத்து மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.

தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி நிலவுகிறது. இந்த தேர்தலில் வெற்றி வாகை சூடுவதற்காக ஒவ்வொரு கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. தற்போது கோடையின் வெப்பம் அதிகமாக இருந்தாலும், தலைவர்கள்-வேட்பாளர்களின் பிரசாரங்கள் அதனை விட அனல் கக்கியது.

தமிழக சட்டமன்ற தேர்தலையொட்டி தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் சென்று, அனல் பறக்கும் பிரசாரம் செய்து வருகிறார்.



இந்நிலையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வீடியோ பதிவு ஒன்றை தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில், தமிழ்நாடு மீதும், தமிழ் மக்கள் மீதும் நான் கொண்ட பெரும் பாசத்தையும்நாம்எதிர்கொள்ளும் அபாயங்களையும் மனம்விட்டுப் பேசியுள்ளேன். காணுங்கள்...

அந்த வீடியோவில் அவர் கூறியதாவது:- சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சியே நமது முதல் குறிக்கோள். கலைஞரை விட MORE DANGER என என்னை சொல்லும்போது ஒன்றே ஒன்றுதான் என் நினைவுக்கு வருகிறது. தமிழ்நாட்டை வஞ்சிக்க நினைப்பவர்களுக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்க நினைப்பவர்களுக்கும் நான் என்றுமே DANGER தான். பா.ஜ.க. மாதிரியான மதவாத கட்சிகள், திமுகவை இந்துக்களுக்கு எதிரான கட்சி என பொய் பிரச்சாரம் செய்கின்றனர். திமுக ஒருபோதும் இந்துக்களுக்குஎதிரான கட்சி அல்ல. சிறுபான்மையினருக்கு ஒரு பிரச்சனை என்றால் முதலில் குரல் கொடுப்பதும் துணை நிற்பதும் திமுகதான். தமிழ்நாட்டில் திமுக இருக்கும் வரை பாஜக வெல்ல முடியாது என்பதை வரலாறு சொல்லும். நமது உரிமை, கலாச்சாரம், மொழியை அழிக்க நினைக்கும் பாஜக, அவர்களின் அடிமைகள் தமிழ்நாட்டுக்கு வேண்டாம். திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.7,000 கோடிக்கும் அதிகமான திருக்கோவில் சொத்துகளை மீட்டுள்ளோம். திமுக ஆட்சியில்தான் ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தியுள்ளோம்.

ஸ்டாலின் சார், இந்த 5 வருசத்துல மக்களுக்கு என்ன பண்ணிருக்கீங்க?.. அப்படினு யாராவது கேட்டா, மணிக் கணக்கா, நாள் கணக்கா பேச முடியும். எத்தனை பிரச்சினை வந்தாலும் தமிழகத்தை பாதுகாப்பேன். நம்ம ஆட்சியில் குறைகளாக சொல்லப்பட்ட சில விசயங்களில் கூட, மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது ரொம்பவே BETTER-ஆ நாம இருக்கோம். இருந்தாலும் அந்தக் குறைகளையும் சரிசெய்ய எல்லா வழிமுறைகளையும் நாம செஞ்சுட்டோம். அதனுடைய விளைவுகளை இன்னும் கொஞ்ச நாளில் நாம் பார்ப்போம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியும் எதிர்காலமும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு தொடர தி.மு.க. கூட்டணிக்கு வாக்களியுங்கள்.

இவ்வாறு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# 100 நாள் வேலை திட்டத்துக்கு மத்திய அரசு ரூ. 17,744 கோடி ஒதுக்கீடு

**புதுடெல்லி, ஏப்.22:**

மேற்காசிய போர்ப் பதற்றத்தால் விநியோகச் சங்கிலி மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலையில் ஏற்படும் தாக்கத்தை எதிர்கொள்ளும் விதமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு (100 நாள் வேலைத் திட்டம்) ரூ.17,744 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

ஊரக நலன் மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களை மறுஆய்வு செய்தபோது 100 நாள் வேலைத் திட்டத்துக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியது.

இதுதொடர்பாக மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'மேற்காசிய போர்ப் பதற்றத்தால் ஊரகப் பகுதிகளில் வாழ்வாதாரம், குடியிருப்புகள் கட்டமைப்பு, சாலை மேம்பாடு மற்றும் நீர்நிலை செயல்பாடுகளில் நேரடி தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் இத்துறைகளை மத்திய அரசு தீவிரமாக கண்காணித்து வருகிறது. எனவே, மேற்கூறிய துறைகள் சார்ந்த திட்டங்களை தங்கு தடையின்றி செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. விபி-ஜி ராம் ஜி திட்டம், 2025 அமலுக்கு வரும் வரை 100 நாள் வேலைத் திட்டம் செயல்பாட்டில் இருக்கும். ஊதியங்கள் முறையாக வழங்கப்படும். இதற்காக ரூ.17,744 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் 2029, மார்ச் மாதத்துக்குள் 4.95 கோடி வீடுகளைக் கட்டும் நோக்கில் பிரதமரின் வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் நான்காவது கட்டத்தின்கீழ் 12,100 கி.மீ. தொலைவுக்கு சாலைகள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுபோன்ற ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள் எவ்வித தொய்வுமின்றி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஈரோடு: மொடக்குறிச்சியில் ரூ.89 லட்சம் பறிமுதல்

**ஈரோடு, ஏப்.22:**

தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந் தேதி நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்குவந்தது. உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் நகை, பணம் உள்ளிட்டவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்து வருகின்றனர்.

வாக்காளர்களுக்கு பணம் கொண்டு செல்லப்படுகிறதா? என்பதை கண்டறிய தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர வாகன சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட செலம்பகவுண்டன் பாளையத்தில் ரூ.89.92 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அரவிந்தன் என்பவரிடம் காரில் உரிய ஆவணங்கள் ஏதுமின்றி கொண்டு வரப்பட்ட ரூ.89.92 லட்சத்தை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் கைப்பற்றினர். அதன்பின்பு கைப்பற்றப்பட்ட பணத்தை வருமானவரித் துறையிடம் ஒப்படைத்தனர்.

# வட இந்திய மாநிலங்களில் வெப்ப அலை தாக்கும் அபாயம்: தமிழகத்திற்கு பாதிப்பா..?

**புதுடெல்லி, ஏப்.22:**

இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது:-

வடமேற்கு இந்தியா, மத்திய இந்தியா மற்றும் கிழக்கு இந்தியாவை ஒட்டிய இடங்களில் 20-ந் தேதி முதல் 25-ந் தேதிவரை வெப்ப அலை வீசும். குறிப்பாக, அரியானா, சண்டிகார், டெல்லி, பஞ்சாப், கிழக்கு ராஜஸ்தான், விதர்பா, சத்தீஷ்கார், மேற்கு உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், மேற்கு வங்காளம், ஜார்கண்ட், ஒடிசா, கிழக்கு உத்தரபிரதேசத்தின் சில பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் ஆங்காங்கே வெப்ப அலை வீசும்.

மேற்கு வங்காளத்தில் கங்கைக்கரையை ஒட்டிய பகுதிகளில் சில இடங்களில் 26-ந் தேதிவரை வெப்பமும், ஈரப்பதமான வானிலையும் நிலவும். தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளில் 22-ந் தேதிவரை அதிக வெப்பநிலையும், ஈரப்பதமான வானிலையும் நிலவும்.

கேரளம், மாஹே, கடலோர ஆந்திரா, ஏனாம் ஆகிய பகுதிகளில் 24-ந் தேதி வரையும், குஜராத் கடலோர பகுதிகளில் 24 மற்றும் 25-ந் தேதிகளிலும் அதிக வெப்பநிலையும், ஈரப்பதமான வானிலையும் நிலவும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எண்ம கைது மோசடி! அதிர்ச்சியளிக்கிறது: உச்சநீதிமன்றம்



**புதுடெல்லி, ஏப்.22:**

எண்ம கைதால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்கும் வழக்கு விசாரணை தேதியை ஒத்திவைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வில் மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் ஆர். வெங்கடரமணி திங்கள்கிழமை முறையிட்டார். இதைக் கேட்ட தலைமை நீதிபதி சூர்ய காந்த், 'எனக்குத் தெரிந்த ஒரு வயது முதிர்ந்த பெண்ணும் எண்ம கைது மோசடியால் பாதிக்கப்பட்டுள்ளார். துரதிருஷ்டவசமாக அவரின் ஓய்வூதியப் பணம் முழுவதும் அபகரிக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டது. எண்ம கைது மோசடியால் நன்கு படித்தவர்களும் ஏமாற்றப்படுவது அதிர்ச்சியளிக்கிறது' என்று தெரிவித்தார். இதையடுத்து, எண்ம கைது மோசடிகள் தொடர்பாக உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்கும் வழக்கு மே 12-க்கு ஒத்திவைக்கப்பட்டது. முன்னதாக, எண்ம கைது மோசடிகள் தொடர்பாக நாடு தழுவிய ஒருங்கிணைந்த விசாரணை மேற்கொள்ளுமாறு சிபிஐ-க்கு கடந்த டிசம்பர் 1-ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

# தமிழக சட்டப்பேரவைத் தேர்தல்: மாநிலம் முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகள் - தேர்தல் ஆணையம் தகவல்

**சென்னை, ஏப்.22:**

தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

1. வாக்காளர் பட்டியல்: 01.01.2026-ஐத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, இறுதி வாக்காளர் பட்டியல் 23.02.2026 அன்று வெளியிடப்பட்டது. மேலும் அதனைத் தொடர்ந்து, தொடர் திருத்தக் காலம் தொடங்கியது. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து, அதாவது 23.02.2026 முதல் 26.03.2026 வரை (வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசித் தேதிக்கு பத்து நாட்கள் முன்புவரை) படிவங்கள் 6, 6A, 7 மற்றும் 8 ஆகியவற்றில் பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் நடைமுறையில் உள்ள அறிவுறுத்தல்களின்படி, முறையாகப் பரிசீலிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 06.04.2026 அன்றுள்ளவாறு புதுப்பிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல், உரிய வாக்காளர் பதிவு அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல்கள் தமிழ்நாடு, தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. 06.04.2026 நிலவரப்படி, வாக்காளர் பட்டியலில் மொத்தம் 5,73,43,291 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில், 2,80,30,658 ஆண் வாக்காளர்களும், 2,93,04,905 பெண் வாக்காளர்களும், 7,728 மூன்றாம் பாலின வாக்காளர்களும் அடங்குவர்.



வாக்குச்சாவடிகள்: 1200-க்கும் மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட வாக்குச்சாவடிகள், 'வாக்குச்சாவடிகள் குறித்த கையேடு - 2020'-இல் (MANUAL ON POLLING STATIONS, 2020) இடம்பெற்றுள்ள வழிகாட்டுதல்களின்படி மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்காக, மாநிலம் முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகளும், 33,211 வாக்குச்சாவடி அமைவிடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஊதியத்துடன் கூடிய விடுமுறை: மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951-இன் பிரிவு 135B-இன் கீழ் இந்தியத் தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களின்படி, பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக, வணிகம், வர்த்தகம், தொழிற்சாலை அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்களில் பணிபுரியும் ஒவ்வொரு நபருக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இதில், சுழற்சி முறை அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களும், சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிக்கு வெளியே பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்களும் அடங்குவர். வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்று பொது விடுமுறையாக அறிவிக்க ப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இந்தியத் தேர்தல் ஆணையம், CAPF அல்லாத நடவடிக்கைகளில் ஒன்றாக, வாக்குப்பதிவு நாளன்று பதட்டமான வாக்குச்சாவடிகளுக்கு நுண் பார்வையாளர் நியமிக்கலாம் என அறிவுறுத்துகிறது. நுண் பார்வையாளர், வாக்குச்சாவடியில் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளைக் கண்காணிப்பார். தேர்தல் செயல்முறைகள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறுகின்றனவா என்பதையும், வாக்குப்பதிவில் எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்பதையும் கண்காணிப்பதே அவரது பணியாகும். பொதுப் பார்வையாளர், நுண் பார்வையாளர்களின் பணிகளை மேற்பார்வையிடுவார் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பார். வாக்குப்பதிவு செயல்முறை முடிந்த பிறகு, நுண் பார்வையாளர் பொதுப் பார்வையாளருக்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பார். 2026-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்காக 7014 நுண் பார்வையாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

3. நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல், 2026 க்காக இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டிலுள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 136 பொதுப்பார்வையாளர்கள், 40 காவல் பார்வையாளர்கள் மற்றும் 150 செலவினப் பார்வையாளர்களையும் நியமித்துள்ளது. தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தொடர்பாக, 83875 காவல்துறை பணியாளர்கள் மற்றும் 40427 காவல்துறை அல்லாத பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், மத்திய உள்துறை அமைச்சகம் மத்திய ஆயுத பாதுகாப்புப் படையின் 300 கம்பெனிகளை பாதுகாப்பான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்காக நியமித்துள்ளது.



# சென்னை அண்ணா அறிவாலயத்தில் தேர்தல் வார் ரூம் திறப்பு




**சென்னை, ஏப்.22:**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தேர்தல் வார் ரூம் திறக்கப்பட்டது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் சட்டமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலை திறம்பட கையாளும் வகையில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

களத்தில் நிலவும் பிரச்சனைகள், சந்தேகங்கள் தொடர்பாக 08069446900 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு கருத்துகளை தெரிவிக்கலாம் என திமுக தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ‘பதைபதைக்கச் செய்கிறது தி.மலை சம்பவம்... பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை’

## நயினார் நாகேந்திரன்



**சென்னை, ஏப்.22:**

‘தமிழகத்தை சீரழித்த திமுக ஆட்சியில் பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை என்பது மிகத் தெளிவாகிறது. பெண்கள் பாதுகாப்பை பறிக்கும் சமூக விரோதிகளை வளர்த்துவிட்டது திமுக ஆட்சி’ என திருவண்ணாமலை சிறுமி பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் ஆவேசமாக கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்ள திருவண்ணாமலைக்கு வந்திருந்த 15 வயது சிறுமியை 8 பேர் கொண்ட கும்பல் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்திருப்பதாக வெளிவந்துள்ள தகவல் மனதை பதைபதைக்கச் செய்கிறது.

புண்ணிய பூமியான திருவண்ணாமலையில் தரிசனம் செய்ய வந்த இளம்பெண்ணை அவரது தாய் முன்பே இரு காவலர்கள் வன்கொடுமை செய்த ரணம் மனதை விட்டு ஆறும் முன்பே, மற்றொரு கொடூரம் அரங்கேறி இருப்பது திறனற்ற திமுக ஆட்சியால் பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை என்பது மிகத் தெளிவாகிறது.

பெண்கள் பாதுகாப்பை பறிக்கும் சமூக விரோதிகளை வளர்த்துவிட்ட திமுக ஆட்சிக்கு நாளை மறுநாள் தமிழக மக்கள் முடிவுரை எழுதுவர். தேசிய ஜனநாயக கூட்டணியைத் தேர்ந்தெடுத்து தமிழகத்தை மீட்டெடுத்து காப்பர்’ எனத் தெரிவித்துள்ளார்

# நடிகர் பார்த்திபனுக்கு சாதி, மதமற்றவர் சான்றிதழ்: வட்டாட்சியருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு



**சென்னை, ஏப்.22:**

நடிகர் பார்த்திபனுக்கு சாதி, மதமற்றவர் என சான்றிதழ் வழங்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நடிகரும் இயக்குநருமான பார்த்திபன், “நான் சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதால் எனக்கு சாதி, மதமற்றவர் என சான்றிதழ் வழங்க வேண்டும் என சோழிங்கநல்லூர் வட்டாட்சியரிடம் விண்ணப்பித்தேன்.

ஆனால் அவர் எனது விண்ணப்பத்தின் மீது எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை. எனவே எனக்கு சாதி, மதமற்றவர் என சான்றிதழ் வழங்க வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்’’ எனக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி எம். தண்டபாணி முன்பாக நேற்று நடந்தது. அப்போது ‘நோ கேஸ்ட், நோ ரிலீஜியன்’ என வாசகம் பொறிக்கப்பட்ட சட்டை அணிந்து உயர் நீதிமன்றத்துக்கு வருகை தந்த நடிகர் பார்த்திபன், தனக்கு சாதி, மதம் அற்றவர் என சான்றிதழ் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிடக்கோரிவேண்டுகோள் விடுத்தார்.

அதையடுத்து நீதிபதி, ஏப்.29-ம் தேதிக்குள் மனுதாரரான பார்த்திபனுக்கு ‘சாதி, மதமற்றவர்’ என சான்றிதழ் வழங்க சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு உத்தரவிட்டார். மேலும் பார்த்திபனின் இந்த நல்ல முயற்சிக்கு வாழ்த்து தெரிவித்த நீதிபதி, அதிகாரிகள் சான்றிதழ் வழங்கியது தொடர்பான நகலை ஏப்.29 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும், என உத்தரவிட் டுள்ளார்.

# மெட்ரோ பயணிகளுக்கு முக்கிய செய்தி: இனி ’சிங்கார சென்னை அட்டை’ மட்டுமே!




**சென்னை, ஏப்.22:**

“சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், மெட்ரோ ரயில்களில் பயணிக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பயண அட்டையுடன் கூடுதலாக 14.04.2023 முதல் "சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது போக்குவரத்து அட்டை)” அறிமுகப்படுத்தியது.

இந்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, இந்தியா முழுவதும் உள்ள பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் தடையற்ற பயணத்தை உறுதி செய்யும் வகையில், 01.05.2026 முதல் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் “சிங்கார சென்னை அட்டைக்கு (தேசிய பொது போக்குவரத்து அட்டை)" முழுமையாக மாற திட்டமிட்டுள்ளது.

எனவே, மெட்ரோ ரயில்களில் பயணம் செய்யவும், மெட்ரோ வாகன நிறுத்தங்களை பயன்படுத்தவும், பயணிகள் தங்களது பழைய பயண அட்டையில் மீதமுள்ள தொகையை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மொபைல் செயலி மூலம் பெறப்படும் QR Stored Value Pass அல்லது தேசிய பொது போக்குவரத்து அட்டைக்கு மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பான, நம்பகமான பயண அனுபவத்தை வழங்க சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உறுதியுடன் உள்ளது. இதனால் ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம். உங்கள் மேலான ஆதரவைத் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.” என தெரிவித்துள்ளது.

# ‘சென்னை என்றுமே திமுகவின் கோட்டை’ - நடந்து சென்று வாக்கு சேகரித்த முதல்வர் ஸ்டாலின்



**சென்னை, ஏப்.22:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடையும் நிலையில், முதல்வர் ஸ்டாலின் சென்னையில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுருந்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நாளை மறுதினம் (ஏப்ரல் 23) அன்று நடைபெறுகிறது. தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைவந்ததால், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் நேற்று சென்னையில் பல்வேறு தொகுதிகளில் பிரச்சாரம் செய்த நிலையில், இன்றும் சென்னையில் உள்ள சோழிங்கநல்லூர், வேளச்சேரி, சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

நேற்று காலையில் நடந்து சென்று வாக்கு சேகரித்த ஸ்டாலின், ஆட்டோ ஓட்டியும், இளைஞர்களிடம் செல்ஃபி எடுத்தும் உற்சாகமாக பிரச்சாரம் செய்தார்.

இதனை தொடர்ந்து சென்னையில் தான் பிரச்சாரம் மேற்கொண்ட புகைப்படங்களை பகிர்ந்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘சென்னை என்றுமே தி.மு.க.வின் கோட்டை. சோழிங்கநல்லூர் - வேளச்சேரி - சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் மக்கள் அளித்த அன்பும் வரவேற்பும்’ எனத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட மற்றொரு எக்ஸ் பதிவில், ‘டெல்லியின் சர்வாதிகாரம் தமிழ்நாடுக்குள் ஊடுருவாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், நாங்கள் எங்களைப் பாதுகாத்து வருகிறோம்.

ஜனநாயகத்தைக் காப்பதற்கு, பாசிசத்தைத் தோற்கடிப்பதே ஒரே தீர்வாகும். ஜனநாயகம் மற்றும் அந்த ஜனநாயகத்துக்குள் அடங்கியுள்ள வாக்களிக்கும் உரிமை ஆகியவை அளவற்ற வலிமை வாய்ந்தவை.

ஜனநாயகத்தின் மகத்தான வலிமையின் மீதும், வாக்குச்சீட்டின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட தமிழ்நாடே இறுதியில் வெல்லும். சர்வாதிகாரப் பாதையில் பயணிக்க முயல்பவர்களை இந்திய நாடு நிச்சயம் தோற்கடிக்கும்’ எனத் தெரிவித்துள்ளார்.

# “அதிமுக ஆட்சி அமைந்தால் வளமான தமிழகம் உருவாகும்” - ஜி.கே.வாசன்



**சென்னை, ஏப்.22:**

“மீண்டும் தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக ஆட்சி அமைய வேண்டும். அதன் மூலம் வலிமையான பாரதத்தில் வளமான தமிழகம் உருவாகும்” என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “2026 சட்டமன்ற தேர்தலை சந்திக்கப் போகும் தமிழகத்தின் தற்போதைய உண்மை நிலை அனைத்து துறைகளிலும் வளர்ச்சி குன்றி, சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து, பெண்களுக்கான பாதுகாப்பு இல்லை என்பதுதான். மேலும் தமிழக அரசு, மத்திய அரசோடு ஒத்த கருத்தாக இல்லாமல் காழ்ப்புணர்ச்சி அரசியல் செய்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

மீண்டும் தமிழகத்தில் அதிமுக ஆட்சி, எடப்பாடி பழனிசாமி தலைமையிலே அமைய வேண்டும். அதன் மூலம் வலிமையான பாரதத்தில் வளமான தமிழகம் உருவாகும். வலிமையான பாரதம் பிரதமர் மோடி தலைமையிலே இந்தியா பொருளாதாரத்திலும், பாதுகாப்பிலும் உறுதியாக செயல்படுகிறது.

அதற்கு ஒத்த கருத்துடைய வளமான தமிழகம், வளர்சியான தமிழகம், பாதுகாப்பான தமிழகம் அமைய அதிமுக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றியை தமிழக மக்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

# அட்சய திரிதியை நாளில் திருப்பதி கோவிலில் ரூ.1.10 கோடி தங்க டாலர்கள் விற்பனை



**திருப்பதி, ஏப்.22:**

அட்சய திரிதியை முன்னிட்டு, திருப்பதி ஏழுமலையான் கோவிலில் அமைந்துள்ள விற்பனை மையத்தில் தங்கம், வெள்ளி, செம்பு டாலர் விற்பனை களை கட்டியது. அட்சய திரிதியை நேரம் என்பதால், ஞாயிற்றுக்கிழமை மதியம் முதல் திங்கட்கிழமை மதியம் வரை பக்தர்கள் வரிசையில் நின்று தங்க டாலர்கள் வாங்கினர். ஞாயிற்றுக்கிழமை ரூ.70 லட்சம் மதிப்பிலான டாலர்களும் திங்கட்கிழமை ரூ. 40 லட்சம் மதிப்பிலான டாலர்களும் விற்பனையானது.

கடந்த ஆண்டு, சுமார் ரூ. 90 லட்சம் மதிப்பிலான டாலர்கள் விற்பனை செய்யப்பட்டன. இந்த ஆண்டு, தங்கத்தின் விலை பெருமளவில் அதிகரித்த போதிலும், பக்தர்கள் தொடர்ந்து டாலர்களை வாங்கினர்.

திருப்பதி கோவிலில் நேற்று 80,084 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 28,929 பேர் முடிக்காணிக்கை செலுத்தினர். ரூ.3.69 கோடி உண்டியல் காணிக்கை வசூல் ஆனது. நேரடி இலவச தரிசனத்திற்கு வந்த பக்தர்கள் 6 மணி நேரத்தில் சாமி தரிசனம் செய்தனர்.

# டாஸ்மாக் கடைகள் 3 நாட்கள் மூடப்பட்டதால் ரூ.350 கோடிக்கு விற்பனை






**சென்னை, ஏப்.22:**

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நாளை (23-ந்தேதி) நடைபெறுவதால் மதுக்கடைகள், பார்கள் மற்றும் ஓட்டல் பார்கள் அனைத்தும் மூடப்பட்டன.

நேற்று முதல் தேர்தல் நடைபெறும் 23-ந்தேதி வரை மூடப்படுவதால் டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அலைமோதியது. நேற்று பகலிலேயே மது பானங்களை வாங்கி குவிக்க தொடங்கினர். தற்போது தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள கட்சித் தொண்டர்கள் மத்தியில் பணப் புழக்கம் அதிகமாக இருப்பதால் பெட்டி பெட்டியாக மதுபானங்களை வாங்கிச் சென்றார்கள்.

சென்னை உள்ளிட்ட அனைத்து நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளில் நேற்று இரவு 7 மணி முதல் நீண்ட வரிசை காணப்பட்டது. 3 நாட்கள் மது வகைகள் இல்லாமல் சமாளிப்பது மது பிரியர்களுக்கு மேலும் அதிர்ச்சியாக இருந்தது.

அதனால் நேற்று இரவு 10 மணிக்கு கடைகளை அடைக்க முடியாத அளவுக்கு கூட்டம் நிரம்பி காணப்பட்டது. ஒரு சில கடைகளில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

தற்போது கோடை காலம் என்பதால் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் பீர் பாட்டில்கள் கொண்ட பெட்டிகளை அதிகமாக வாங்கி சென்றனர். இருசக்கர வாகனங்களிலும், கார்களிலும் மொத்தமாக மதுபானங்களை அள்ளிச் சென்றனர்.

இதனால் டாஸ்மாக் கடைகளில் நேற்று விற்பனை அமோகமாக நடைபெற்றது. ஊழியர்களால் மதுபானங்களை வழங்க முடியாத அளவிற்கு கூட்ட நெரிசல் இருந்தது.

வழக்கமாக டாஸ்மாக் கடைகள் மூலம் தினமும் ரூ.140 கோடி முதல் ரூ.150 கோடிக்கு மது விற்பனை நடைபெறும். ஆனால் நேற்று ஒரே நாளில் மட்டும் ரூ.350 கோடிக்கு மது விற்பனை நடந்ததாக டாஸ்மாக் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது வழக்கத்தை விட 2½ மடங்கு மது விற்பனை அதிகமாகும்.

பண்டிகை காலங்களில் நடைபெறும் மது விற்பனையை விட தேர்தல் நேரத்தில் மதுபானங்கள் அதிக அளவில் விற்பனையானது.

கடைகள் மூடப்படுவதால் அதிகளவு மது விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டு நேற்று அனைத்து கடைகளிலும் தேவைக்கு அதிகமாக மதுபானங்களை குவித்து வைத்திருந்தனர்.

அதனால் கேட்கும் மது பானங்களை மதுபிரியர்களுக்கு தேவையான அளவு வழங்கினார்கள்.

# ‘பாமகவில் நடக்கும் குழப்பங்களுக்கு ஸ்டாலினும், அவரது மருமகனும்தான் காரணம்’ – அன்புமணி ராமதாஸ்



**சென்னை, ஏப்.22:**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலையொட்டி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சேலம் மாவட்டத்தின் இன்று தனது இறுதிகட்ட பிரசாரத்தில் ஈடுபட்டார். இதில் கூட்டணிக் கட்சித் தலைவரான அன்புமணி ராமதாஸும் கலந்துகொண்டு பிரசாரம் செய்தார்.

அப்போது பேசிய அன்புமணி ராமதாஸ், “அதிமுக தலைமையிலான வெற்றிக் கூட்டணியான என்டிஏ கூட்டணிக்கு தலைமை வகிக்கும் இபிஎஸ் இன்னும் 2 மாதத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்க உள்ளார். அவர் ஒரு விவசாயி, சேலம் மாவட்டத்தின் மண்ணின் மைந்தன் என்பது எல்லோருக்கும் பெருமை. தமிழ்நாட்டிற்கு விடுதலை கிடைக்க வேண்டும். இந்த நரக ஆட்சிக்கு உங்கள் மூலம், தாய்மார்கள், பெண்கள் மூலம் விடிவுகாலம் வர வேண்டும். 62 ஆயிரம் வழக்குகள் பெண்களுக்கு எதிரான குற்றங்கள்...அதில் 27 ஆயிரம் வழக்குகள் போக்சோ வழக்குகள். 44 ஆயிரம் வழக்குகள் பெண்களுக்கு எதிரான குற்றங்கள். இப்படி ஒரு ஆட்சியா..? ஆனால், முதலமைச்சருக்கு என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை. ஏதோ வருகிறார் விளம்பரப் படத்தில் நடக்கிறார். வீட்டிற்குப் போகிறார். ஏதோ எழுதிக் கொடுக்கிறார்கள், அதை படிக்கிறார்.

# சட்டசபை தேர்தல் சொந்த ஊர்களுக்கு செல்ல 1.10 லட்சம் பேர் முன்பதிவு




**சென்னை, ஏப்.22:**

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நாளை மறுநாள் நடைபெறுகிறது. இதையொட்டி அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இன்று முதல் 3 நாட்கள் இயக்கப்படுகிறது.

சென்னையில் பல்வேறு பகுதியில் தங்கி தொழில் மற்றும் வேலை செய்து வரும் மக்கள் ஓட்டுப்போட சொந்த ஊர்களுக்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து 5574 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

வழக்கமாக இன்று இயக்கப் படும் 2092 பஸ்களுடன் கூடுதலாக 1404 சிறப்பு பஸ்கள் நேற்று இயக்கப்பட்டது. கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் ஆகிய பஸ் நிலையங்களில் இருந்து இந்த சிறப்பு பஸ்கள் இயக்கப்பபடுகிறது.

இன்று (22ந்தேதி) 3570 சிறப்பு பஸ்களும் நாளை மதியம் ஒரு மணி வரை 600 சிறப்பு பஸ்களும் சென்னையில் இருந்து பல்வேறு நகரங்களுக்கு இயக்கப்படுகிறது.

இதற்கான முன்பதிவு கடந்த சில நாட்களில் நடைபெற்று வந்தது. இதுவரையில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

இதில் நேற்று பயணம் செய்ய 40 ஆயிரம் பேரும், இன்று பயணத்திற்கு 70 ஆயிரம் பேரும் முன்பதிவு செய்துள்ளனர். நீண்ட தூரம் செல்லக்கூடிய அரசு விரைவு பஸ்கள் மற்றும் இதர போக்குவரத்து கழக பஸ்களுக்கு முன்பதிவு நடக்கிறது. பொதுமக்கள் சிரமம் இல்லாமல் பயணம் செய்ய முன்பதிவு செய்து கொள்ளலாம்.

# “எத்தனை கேஜ்ரிவால், ராகுல் வந்தாலும் தமிழகத்தில் என்டிஏ வெற்றியைத் தடுக்க முடியாது” - தமிழிசை



**சென்னை, ஏப்.22:**

“தமிழகத்துக்கு எத்தனை அரவிந்த் கேஜ்ரிவால்கள், ராகுல்கள் வந்தாலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியைத் தடுக்க முடியாது” என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கூறியுள்ளார்.

மயிலாப்பூர் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் தமிழிசை இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “நாங்கள் ஓட்டுக் கேட்டு மட்டும் செல்லவில்லை. அந்தந்தப் பகுதியில் உள்ள பிரச்சினைகளை குறித்து வைத்துள்ளோம்.

வெற்றி பெற்ற நூறு நாட்களில் அப்பகுதி மக்களின் அடைப்படை தேவைகளை பூர்த்தி செய்வோம். மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க தயாராக இருக்கிறேன்.

பல இடங்களை தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. இவை அனைத்தும் சரி செய்யப்படும். எத்தனையோ தேர்தல்களை நான் சந்தித்துவிட்டேன். நாங்களும் கட்சியுடன் சேர்ந்து வளர்ந்து வருகிறோம்.

தற்போது எனக்கு மயிலாப்பூர் மக்கள் வாக்களிக்க வேண்டும். மீனவ பெண்களுக்கு தனி திட்டம் வைத்துள்ளேன். திமுகவின் கவுன்டவுன் ஆரம்பித்துவிட்டது.

தமிழகத்துக்கு எத்தனை அரவிந்த கேஜ்ரிவால்கள், ராகுல்கள் வந்தாலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியைத் தடுக்க முடியாது. அமித் ஷாவின் ரோடு ஷோ நல்ல விதமாக அமைந்தது” என்று அவர் தெரிவித்துள்ளார்.
































துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555







WANTED ISO
THANIGAI
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit / No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work – just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy / 90879 55111




WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872

## கவிதை அரங்கம்!





நீ அருகில் இருந்தால்
காலம் உறைகிறது, நீ
விலகிச் சென்றால் இதயம்
வலிக்கிறது.

உலகிலேயே எனக்குப்
பிடித்த இசை, நீ என்
பெயரை உச்சரிக்கும்
சத்தம் தான்.
நிழல் கூட உன்னை விட்டு
விலகலாம், ஆனால் என்
நினைவுகள் உன்னைத்
தொடரும்.
உன் கரம் கோர்ப்பது
வெறும் பிடியல்ல,
என் வாழ்நாள்
முழுமைக்குமான
நம்பிக்கை.

காயங்கள் ஆயிரம்
இருந்தாலும், உன் ஒரு
அணைப்பு போதும்
அத்தனையையும்
குணமாக்க.

## வாழ்க்கை தத்துவம்...



மனசாட்சிப்படி வாழ்ந்தாலே
போதும் மகான் போல
வாழ வேண்டும்
என்று அவசியமில்லை

அருகில் இருக்கும் அனைவரும்
அன்பானவர்கள் இல்லை
அன்பானவர்கள் அனைவரும்
அருகில் இருப்பதில்லை

நேற்றைய கவலைகளால் இன்றைய சந்தோஷத்தை அடகு வைக்காதே.

மற்றவர்களைப் போல வாழ நினைக்காதே, உன்னைப் போல வாழப் பழகு.

கோபம் என்பது அடுத்தவர் செய்யும் தவறுக்கு உனக்கு நீயே கொடுத்துக் கொள்ளும் தண்டனை.

# கோயில் சோறு...

அதிகாலை மூன்றரை மணிக்கெல்லாம் பரபரத்துக் கொண்டிருந்தாள்மாலதி. அவசர அவசரமாக குளித்து முடித்து பொட்டு வைத்து பூ முடித்து, புடவை கட்டி சிங்காரித்துக்கொண்டு கிளம்புவதற்கு நான்கு மணி ஆகிவிட்டது. கோயிலின் நடை திறப்பதற்குள் போனால்தான் கோயில் உட்பிரகாரங்களில் கூட்டி துடைத்து சுத்தம் செய்வதற்கு வசதியாய் இருக்கும் என்று அரக்க பறக்க ஓடிக்கொண்டிருந்தாள். அது ஒரு அரசுடமையாகப்பட்ட கோவில் காலை நான்கு மணிக்கெல்லாம் கோயிலுக்குள் நுழைந்தால்தான் அங்கு இருக்கிற தூசு தும்புகளை துடைத்து சுத்தம் செய்ய வசதியாய் இருக்கும் மாலதிக்கு. அதிகாலை நான்கு, மணிக்கு கோயிலுக்குள் நுழைந்தால் அன்று மதியம் மூன்று மணிக்கு மேல் தான் கோவிலை விட்டு வெளியே வர முடியும் மாலதிக்கு அப்படி ஒரு வேலை இக்கட்டான தன் குடும்ப சூழ்நிலையை மனதில் வைத்துக் கொண்டு ஓடிக்கொண்டே இருந்தாள். காலையில் விளக்கு மாற்றை கையில் எடுத்தாள் என்று சொன்னால்.... மதியம் பணிரெண்டு மணி வரை சுத்தம் செய்கிற பணி என்பது ஓயவே ஓயாது ... அதன் பிறகு அன்னதான கூடத்திற்கு சென்று அங்கே வருகிற பக்தர்களுக்கு அன்னதானங்கள் பரிமாற வேண்டும் அன்னதானம் பரிமாறுவது என்பது புனிதமான ஒரு பணி என்பதை மனதில் நிறுத்திக் கொண்டு செயல்பட வேண்டும். மதிய வேளையில் ருசியான சோறு வகைகள் பரிமாறப்படும் அந்த பரிமாறுகிற கூட்டத்தில் மாலதியும் ஒருத்தி.

கோயிலில் அன்னதானம் சாப்பிடுவதற்கு கோவிலுக்கு வருகின்ற பக்தர்கள் மட்டும்தான் வரவேண்டும் என்கிற பாகுபாடெல்லாம் பார்க்க கூடாது, ஆனால் மாலதி அப்படி இல்லை பணக்கார தோரணையில் வருபவர்களுக்கு ஒரு மாதிரியாகவும், சாதாரண உடை அணிந்து வருவோருக்கு ஒரு மாதிரியாகவும், என்று பாகுபாடு பார்த்து தான் பரிமாறுவாள். அதுவும் வீதியோரம் இருக்கின்ற கையேந்திகள் அன்னதான கூடத்திற்கு வந்துவிட்டால் அவர்களை என்ன பேசுவது ஏது பேசுவது என்று யோசிக்காமல் கண்டபடி பேசுவாள் மாலதி. அப்போதுதான் நான்கைந்து கையேந்தி மனிதர்கள் அன்னதான கூடத்திற்குள் நுழைந்து கொண்டு இருந்தார்கள் அவர்களை பார்த்த மாலதி,

"ரோட்ல உக்காந்து பிச்சை எடுக்கிறவங்க எல்லாம் முதல்ல வந்து அன்னதானத்துல உக்காந்துட்டா.. அப்புறம் கோயிலுக்கு வர்ற மக்களெல்லாம் எப்படி உங்களோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவாங்க..? எல்லாரும் வெளியில போங்க ஒரு மணி நேரம் கழிச்சு உள்ள வாங்க" என்றபடி ஏதோ நாயை விரட்டுவது போல அவர்களை விரட்டிக் கொண்டிருந்தாள். இதை தூரத்திலிருந்து கவனித்துவிட்ட ஒப்பந்ததாரர் கனகரத்தினம்,

"என்னம்மா மாலதி அன்னதானத்திற்கு வருகிற எல்லோரும் பக்தர்கள் தான், அதுல வசதியானவங்க வசதி இல்லாதவங்க, பிச்சைக்காரங்க என்றெல்லாம் பாகுபாடு பார்க்க கூடாது. தயவு செய்து புரிஞ்சி நடந்துக்கோ... ஒருவேளை வயிறார சாப்பிடலாம் என்று தான் சில பேர் கோவிலுக்குள் வருவார்கள் பசியோடு வருகின்ற அவர்களை மனது புண்படும்படியாக நோகும் படியாக பேசக்கூடாது சரியாம்மா..?"

என்று மாலதியின் அருகில் வந்து மிகவும் தன்மையோடு கூறிவிட்டு நகர்ந்தார் சமையல்கார, ஒப்பந்ததாரர் கனகரத்தினம். கோயில் இருக்கிற அந்த பகுதியில் பல வீடுகளில் மதிய சமையல் என்பதே நடக்காது... எல்லோரும் கோயிலின் அன்னதானத்திற்கு வந்து வயிறார சாப்பிட்டுவிட்டு சென்று விடுவார்கள் மிகவும் கௌரவம் பார்க்கின்ற சில குடும்பங்கள் மட்டும்தான் அன்னதானம் சாப்பிடுவதற்கு கோவிலுக்கு வரத்தயங்குவார்கள்.
இதில் சிலர் மாலதியை கைக்குள் போட்டுக் கொண்டு வீட்டிற்கு தேவையான சாம்பார் ரசம் கூட்டு பொரியல் என்று இங்கிருந்து எடுத்துக்கொண்டு போவதுமுண்டு.

என்றபடி மாலதி தனது வாயால் சுடு சொற்களை கொட்டியபடி, ரோட்டோரம் கையேந்தி திரிபவர்களை பேசக் கூடாத வார்த்தைகளையெல்லாம் பேசி தனது ஆதங்கம் என்கிற பெயரில் அனாவசியங்களை கொட்டித் தீர்த்துகொண்டிருந்தாள். மிச்சம் மீதமாய் இருந்த சோறு குழம்பு ரசம் கூட்டு பொரியல் வகைகளை வேலை செய்து கொண்டிருந்த அவரவரும் கொண்டு வந்திருந்த தூக்குவாளிகளில் எடுத்து அடைத்து தனியே ஒரு அறையில் கொண்டு போய் வைத்துவிட்டு சமைத்த பாத்திரங்கள் ஒன்று விடாமல் கழுவி கவிழ்த்து வைத்து விட்டு அனைவரும் தங்களுடைய ஓய்வறையில் சென்று அமர்ந்து விட்டார்கள். சிறிது நேரம் கழித்து வெளியே வந்த மாலதிக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது அவர்கள் துடைத்து வைத்துவிட்டு போயிருந்த உணவு அருந்தும் நாற்காலி,மேசையில் அமர்ந்து ஒரு முழு வாழைஇலையை போட்டு அதில் சோறு குழம்பு ரசம் பொரியல் என்று அத்தனையும் பரிமாறப்பட்டு ரோட்டோரம் அமர்ந்திருந்த ஒரு பெரியவர் உணவருந்திக் கொண்டிருந்தார். கோபமும் ஆத்திரமும் கொப்பளிக்க பெரியவரிடம் வந்து நின்ற மாலதி,

"யோவ்பெருசு உன்னை யாரு உள்ள விட்டது,..? உனக்கு யாரு இலை போட்டது,யாரு பரிமாறினது, நாங்க எல்லாரும் அறைக்குள்ள இருக்கும்போது உனக்கு இதெல்லாம் செஞ்சது யாரு..?" என்று ஆக்ரோசமாக கத்தினாள்.

"அம்மா ஏம்மா... கோபப்படுறீங்க நான் பசிக்குது சாப்பிடலாமென்று உள்ளே வந்தேன் இங்க ஒரு அம்மா தான் நின்னுகிட்டு இருந்தாங்க அவங்க தான் என்னை உட்கார வைத்து இலை போட்டு பரிமாறினார்கள்"என்றார் மிகுந்த அன்பு பெரியவர்
"நாங்கள் அத்தனை பேரும் அறைக்குள் இருக்கும்போது உனக்கு எந்த அம்மா பரிமாறினார்கள் உடனே எனக்கு காட்டு ... அவ எவள்னு நான் பாக்குறேன்" என்று கூறிய மாலதி சாப்பிட்டுக் கொண்டிருந்த முதியவரின் கைகளைப் பிடித்து இழுத்து சாப்பிடுகிற இடத்தில் இருந்து அப்புறப்படுத்த முயற்சி செய்தாள். அதற்குள் அங்கு வந்த கனகரத்தினம், மாலதியின் இந்த செயலை கண்டு மிகவும் மனம் வருந்தி பெரியவரிடம் மன்னிப்பு கேட்டார்.

"ஏங்க பெரியவரே... எல்லோரும் சாப்பிட்டு முடித்து சமைத்த பாத்திரங்களை கழுவி கவிழ்த்திய பிறகு உங்களுக்கு எப்படி சோறு கிடைத்தது இத்தனை பெரிய இலையை போட்டு உங்களுக்கு பரி மாறியது யார்...?"பெரியவரின் தோளில் கைகளை வைத்து ஆறுதலாக கேட்டார் கனகரத்தினம்.
மனிதர்களை மனிதர்களாக மதிக்காமல், ஆலயத்துக்குள்ளேயே மனிதர்களில் வேற்றுமையை பார்க்கின்ற மாலதியின் சிந்தனையை நினைத்துப் பார்க்கும்போது மிகவும் வேதனையாய் இருந்தது கனக ரத்தினத்திற்கு... மாலதியின் இத்தகைய மனிதாபிமானமற்ற செயலும் பேச்சும் சகிக்க இயலாதவையாக இருந்தது. கடவுளுக்கு முன்னால் , சாதி மதம் என்பதெல்லாம் இல்லை என்பதை யும், மனிதர்களில் ஏற்றத்தாழ்வு வேற்றுமை என்பது ஒருபோதும் கடவுளுக்கு முன் கிடையாது என்பதையும் அறிந்திறாத மாலதியை நினைத்து மிகவும் வருத்தப்பட்டார் கனகரத்தினம்.

தனது அத்தனை வேலைகளையும் முடித்துவிட்டு கிளம்புவதற்கு இன்று... மாலை நான்குமணி ஆகிவிட்டது. எப்போதும் கோயிலை விட்டு வெளியேறும் போது சாமி கும்பிட்டு விட்டு தான் வீட்டிற்கு செல்வாள் மாலதி... இன்றும் வழக்கம் போலவே, அம்மனின் முன்னாள் நின்று மனதுருகி வேண்டினாள்... கருவறையில் அமர்ந்திருந்த அம்மனை பார்த்த மாலதிக்கு சற்றே குழப்பமாய் இருந்தது. தனக்கு சோறு பரிமாறிய பெண்ணை பற்றி அந்த பிச்சைக்கார பெரியவர் கூறிய அத்தனை அங்க அடையாளங்களும் கருவறைக்குள் அம்மனாக அமர்ந்து கொண்டிருந்தது.

இத்தனை காலம் இந்த கோயிலை கூட்டி துடைத்து பெருக்கி சுத்தம் செய்து கொண்டிருக்கிற தனக்கு முன் வராத இந்த அம்மன், தெருவோரம் அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் ஒரு பெரியவருக்கு உணவு பரிமாறி இருக்கிறாள் என்று சொன்னால்...! அன்பும் கருணையும், எளிமையும், அங்கொன்றும் இங்கொன்றும் பேசாத நல்ல சிந்தனையும், நாவடக்கமும், பிறருடைய மனம் அறிந்து பசி அறிந்து ஈகை செய்கின்ற குணமும் மனமும் எவரிடத்தில் இருக்கிறதோ அவரிடத்தில் தான் கடவுளுளாகிய அம்மன் இருப்பார் என்கிற உண்மை மாலதிக்கு புரிந்த போது கருவறைக்கு முன் மயங்கி சரிந்து கொண்டிருந்தாள்.

முத்தையா மோகன்
கோயம்புத்தூர் 18.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



விலங்கு மற்றும் பறவை மொக்கைகள்
கேள்வி: மீன் ஏன் தண்ணிக்குள்ளேயே இருக்கு?
பதில்: ஏன்னா வெளில வந்தா அதுக்கு 'மீன்-இங்' (MEANING) இருக்காது!

கேள்வி: கழுதை ஏன் கத்துது?
பதில்: அதுக்கு 'பாட்டு' பாடத் தெரியாததால!
கேள்வி: வாத்து ஏன் அழுதுச்சு?
பதில்: ஏன்னா அது ஒரு 'சோக-வாத்து' (SOGAWATHU)!



## தினம் ஒரு சமையல்



### வெந்தயக் கீரை பருப்பு கடைசல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| வெந்தயக் கீரை: | 1 கட்டு (சுத்தம் செய்தது) |
| துவரம் பருப்பு: | 1/2 கப் |
| சின்ன வெங்காயம்: | 10 (பொடியாக நறுக்கியது) |
| தக்காளி: | 1 (பெரியது) |
| பச்சை மிளகாய்: | 2 அல்லது 3 |
| பூண்டு: | 5 பற்கள் |
| மஞ்சள் தூள்: | 1/4 டீஸ்பூன் |

தாளிக்க: கடுகு, சீரகம், காய்ந்த மிளகாய், பெருங்காயம் மற்றும் எண்ணெய்.

செய்முறை:

பருப்பை வேகவைத்தல்: முதலில் துவரம் பருப்பை நன்கு கழுவி, அதனுடன் மஞ்சள் தூள், பூண்டு மற்றும் தக்காளி சேர்த்து குக்கரில் 3-4 விசில் விட்டு நன்றாக வேகவைத்துக் கொள்ளவும்.




கீரையை வதக்குதல்: ஒரு வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி, நறுக்கிய சின்ன வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும். பின் சுத்தம் செய்த வெந்தயக் கீரையைச் சேர்த்து 2 நிமிடம் வதக்கவும். (கீரையை அதிகம் வதக்கினால் கசப்புத்தன்மை கூடும், கவனம்!)

ஒன்றாக சேர்த்தல்: வதக்கிய கீரையை வேகவைத்த பருப்புடன் சேர்க்கவும். தேவையான அளவு உப்பு சேர்த்து, லேசாக மத்து கொண்டு கடையவும் அல்லது கரண்டியால் மசிக்கவும்.


தாளிப்பு: ஒரு சிறிய கரண்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு, சீரகம், காய்ந்த மிளகாய் மற்றும் பெருங்காயம் தாளித்து, கீரைக் கடைசலில் கொட்டவும்.

## ஆமணக்கு பயன்கள்



ஆமணக்கு (CASTOR) தாவரம் அதன் மருத்துவ குணங்களுக்காகவும், தொழில்முறை பயன்பாட்டிற்காகவும் பழங்காலம் தொட்டே பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக இதிலிருந்து எடுக்கப்படும் விளக்கெண்ணெய் (CASTOR OIL) பல்வேறு நன்மைகளைத் தரக்கூடியது.
ஆமணக்கின் முக்கிய பயன்கள் இதோ:
1. மருத்துவப் பயன்கள்
இயற்கை மலமிளக்கி: மலச்சிக்கல் பிரச்சனை உள்ளவர்களுக்கு விளக்கெண்ணெய் ஒரு சிறந்த தீர்வாகும். சிறிய அளவில் இதனை உட்கொள்வது குடல் இயக்கத்தை சீராக்க உதவும்.
உடல் சூடு தணிய: உச்சந்தலையில் விளக்கெண்ணெய் தேய்த்து குளிப்பதன் மூலம் உடல் சூடு குறையும். கண் எரிச்சல் மற்றும் கண்கள் சிவப்பாவதை இது தடுக்கும்.
மூட்டு வலி நிவாரணி: ஆமணக்கு இலையை நெருப்பில் வாட்டி, மூட்டு வலி அல்லது வீக்கம் உள்ள இடங்களில் ஒத்தடம் கொடுத்தால் வலி விரைவில் குறையும். இதில் உள்ள 'ரிசினோலிக் அமிலம்' (RICINOLEIC ACID) வீக்கத்தைக் குறைக்கும் தன்மை கொண்டது.
2. சருமம் மற்றும் கூந்தல் பராமரிப்பு
கூந்தல் வளர்ச்சி: விளக்கெண்ணெயுடன் தேங்காய் எண்ணெய் கலந்து தலைமுடிக்கு தேய்த்து வந்தால் முடி அடர்த்தியாகவும், கருமையாகவும் வளரும். புருவங்கள் மற்றும் இமைகளில் தடவினால் முடி வளர்ச்சி தூண்டப்படும்.
சரும மென்மை: இது ஒரு சிறந்த ஈரப்பதமூட்டி (MOISTURIZER). பாத வெடிப்புகள் மற்றும் வறண்ட சருமத்திற்கு இதனைத் தடவி வரலாம்.
தழும்புகள் மறைய: தீக்காயங்கள் அல்லது அம்மைத் தழும்புகள் மீது தொடர்ந்து தடவி வர தழும்புகள் மறையத் தொடங்கும்.
3. விவசாயம் மற்றும் தொழில் பயன்பாடு
இயற்கை உரம்: ஆமணக்கு பிண்ணாக்கு ஒரு சிறந்த நைட்ரஜன் உரம். இது பயிர்களுக்கு ஊட்டம் அளிப்பதோடு, மண்ணில் உள்ள கரையான் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும்.

## துஷாரா விஜயனுக்கு இப்படியொரு டாலண்ட் இருக்கா.? இணையத்தில் வைரலாகும் காணொளி



தமிழ் சினிமாவில் வேகமாக முன்னேறி வரும் இளம் நடிகைகளில் ஒருவராக திகழ்கிறார் துஷாரா விஜயன். சமீபத்தில் ரஜினிகாந்த் நடித்த வேட்டையன், விக்ரமின் வீர தீர சூரன் போன்ற படங்களில் நடித்ததன் மூலம் அவர் ரசிகர்களிடையே அதிக கவனம் பெற்றுள்ளார்.
குறிப்பாக சார்பட்டா பரம்பரை படத்தில் ஆர்யாவின் மனைவி மாரியம்மா கதாபாத்திரத்தில் அவர் வெளிப்படுத்திய இயல்பான நடிப்பு பெரிதும் பாராட்டப்பட்டது.
அதேபோல் நட்சத்திரம் நகர்கிறது, அநீதி போன்ற படங்களிலும் வித்தியாசமான கதாபாத்திரங்களைத் தேர்வு செய்து தனது திறமையை நிரூபித்துள்ளார்.
தற்போது பல புதிய படங்களை கைவசம் வைத்திருக்கும் துஷாரா விஜயன், சமூக வலைதளங்களிலும் மிகவும் ஆக்டிவாக உள்ளார்.
இந்நிலையில், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள புதிய வீடியோ ஒன்று ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.
அந்த வீடியோவில் துஷாரா மிக நுணுக்கமாக படம் வரையும் காட்சி இடம்பெற்றுள்ளது.
இதை பார்த்த ரசிகர்கள், "துஷாராவுக்கு நடிப்புக்கு அப்பாற்பட்ட இத்தனை திறமை இருக்கிறதா?" என்று ஆச்சரியமடைந்துள்ளனர்.
பலரும் அவரது ஓவியத் திறனை பாராட்டி வருவதுடன், அவர் ஒரு முழுமையான கலைஞர் எனவும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.



இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கருப்பு நிற மாடர்ன் உடையில் லேட்டஸ்ட்டாக நடத்திய போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

இதோ பாருங்க:

## சினிமா

## தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக போகும் சூப்பர் ஹிட் படமான வித் லவ்... எப்போது தெரியுமா?




கடந்த ஆண்டு டூரிஸ்ட் பேமிலி என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களின் கவனத்தை பெற்றவர் தான் அபிஷன் ஜீவிந்த்.
முதல் படமே செம வரவேற்பு கொடுக்க அடுத்து யாரை வைத்து படம் இயக்குவார் என எதிர்ப்பார்க்கப்பட்டது, ஆனால் யாரும் எதிர்ப்பார்க்காத வண்ணம் ஹீரோவாக என்ட்ரி கொடுத்தார்.
மதன் இயக்கத்தில் தயாரான இப்படத்தில் அபிஷன் ஜீவித்க்கு ஜோடியாக மலையாள சினிமா நடிகை அனஸ்வரா ராஜன் நடித்திருந்தார்.
காதல் கதையை மையமாக கொண்டு உருவான இப்படம் காதலர் தினத்தை முன்னிட்டு வெளியாகி இருந்தது.
திரையரங்கில் இப்படத்தை பார்க்க தவறியவர்கள் மார்ச் மாதம் வித் லவ் படம் ஓடிடியில் வெளியாக பார்த்து ரசித்தார்கள்.
தற்போது என்னவென்றால் விரைவில் வித் லவ் திரைப்படம்அதொலைக்காட்சியில் ஒளிபரப்பாக உள்ளதாம். விஜய்டிவி அதற்கான புரொமோவை வெளியிட்டுள்ளார்கள்.

# அருள்மிகு பரிமளரங்கநாதர் திருக்கோயில், திருநாங்கூர்

108 திவ்ய தேசங்களில் 26 வது திவ்ய தேசம் திருஇந்தளூர் என்ற திருநாங்கூர். இந்த திருத்தலத்தில் பெருமாளின் முகத்தை சந்திரனும், பாதத்தை சூரியனும், நாபிக்கமலத்தை பிரம்மாவும் பூஜிக்கிறார்கள்.

இது கங்கையை விட காவிரி புனிதமானது என்று பெயர் பெற்ற ஸ்தலம்.

பரிமளம் என்பதற்குப் பரிசுத்தம் என்பது பெயர். கங்கையையும், காவிரியையும் பரிசுத்தமாக்கிய இறைவன் என்பதால் இத்தல இறைவனுக்கு "பரிமள அரங்கநாதர்" என்று பெயர்.
பஞ்ச அரங்கத் தலங்களில் இத்தலம் "அந்திரங்கம்" என அழைக்கப்படுகிறது.

இத்தலம் "ஏகாதசி" விரதத்துக்கு உரிய தலம் என்பதால் "ஏகாதசி விரதம்" இருக்க நினைப்பவர்கள், இத்தலத்திற்கு வந்து வழிபட்டு சென்று விரதத்தை ஆரம்பிப்பது நல்லது.
இந்த பெருமாள் கேட்டதையெல்லாம் கொடுக்கும் இறைவன் ஆவார்.

திருஇந்தளூரில் உள்ள இத்திருக்கோவில் "ஏகாதசி விரதம்" சிறப்பு பெறுவதற்கு காரணமாக இருந்த தலமாகும். இங்கு பெருமாள் "வீரசயனத்தில்" கிழக்கு பார்த்து அருள்பாலிக்கிறார்.

இங்கு "சந்திரன்" வந்து தரிசித்துள்ளார். இங்கு உள்ள சந்திர தீர்த்தத்தில் நீராடி தான் "சந்திரன்" தன்னுடைய சாபம் நீங்கப்பெற்றான்.


இங்கு பெருமாளின் முகத்தை சந்திரனும், பாதத்தை சூரியனும், நாபிக்கமலத்தை பிரம்மனும் பூஜிக்கிறார்கள்.

இத்தலத்தில் இறைவனுக்கு தலைமாட்டில் காவிரி தாயாரும், கால்மாட்டில் கங்கை தாயாரும் வழிபடுகிறார்கள்.
மேலும், எமதர்மராஜாவும், அம்பரீசனும் பெருமாளின் திருவடியை பூஜை செய்கின்றனர்.
இத்தலம் தான் கங்கையை விட "காவிரி" புனிதமானவள் என பெயர் பெற்ற திருத்தலமாக விளங்குகிறது.

ஒருசமயம் அம்பரீசன் என்ற மன்னன் நினைத்ததையெல்லாம் பெற்றுத்தரும் ஏகாதசி விரதத்தை பல ஆண்டுகளாக கடைப்பிடித்து வந்தான்.

இவன் ஏகாதசியில் விரதமிருந்து மறுநாள் துவாதசி நல்லநேரத்தில் பிரசாதம் உண்டு விரதத்தை முடிப்பான்.

இவனுடைய நூறாவது விரதநாளில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு



இருந்தது.
அந்த நாட்டு மக்கள் எல்லோரும் மிகவும் சந்தோஷமாக இருந்தனர். ஆனால், தேவலோகத்திலோ அனைவரும் கலக்கமாக இருந்தனர்.

இந்த "அம்பரீசன்" நூறாவது விரதத்தை முடித்துவிட்டால் தேவலோகப் பதவிகூட கிடைத்துவிடும்.

ஒரு மானிடனுக்கு இப்பதவி கிடைத்து விட்டால், தேவர்களின் மரியாதை குறைந்துவிடும் என்று பயந்தனர்.
இந்நிலையில் ஆலோசனைக்காகத் துர்வாசர் முனிவரிடம் சென்றனர்.

அவரும் தேவர்களுக்கு உதவுவதாக தெரிவித்துவிட்டு, மன்னனின் விரதத்தை தடுப்பதற்காக பூலோகம் வந்தார். அவர் வருவதற்குள் மன்னன் விரதத்தை முடித்திருந்தான.

அவன் ஏகாதசி விரதம் முடித்திருந்தாலும், துவாதசி நேரம் முடிவதற்குள் அவன் உணவு அருந்தியிருக்க வேண்டும்.

அப்போது தான் ஏகாதசி விரதத்தின் முழுபலனும் அவனுக்கு கிடைக்கும். ஆனால், துவாதசி நேரம் முடிந்துவிட்டால் பலனில்லை. அப்போது துவாதசி ஆரம்பிக்க மன்னன் உணவு உண்ண தயாராக இருந்தான். அதற்குள் "துர்வாசர்" வந்து விட்டார். துர்வாசர் தன்னுடைய விரதத்தை தடுக்கதான் வந்துள்ளார் என்பதை அறியாமல், மன்னன் அவரை வரவேற்றான்.

இந்த அம்பரீசன் அவரிடம், முனிவரே தாங்களும் என்னுடன் உணவருந்தினால் எனக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் என்றான். துர்வாசர் முனிவர் அம்பரீசனிடம் சரியென்று கூறி, நதியில் நீராடிவிட்டு வருகிறேன். அதற்கு பிறகு உணவருந்தலாம் எனக் கூறிச் சென்றார். இந்த துர்வாச முனிவரின் திட்டம் என்னவென்றால், தான் நீராடிவிட்டு தாமதமாக வந்தால், அதற்குள் "துவாதசி" நேரம் முடிந்துவிடும்.

அம்பரீசன் நமக்காக காத்திருந்தால், அவனது விரதம் தடைப்பட்டுவிடும் என்பது தான் இவருடைய சூழ்ச்சியாக இருந்தன. அந்த துவாதசி நேரம் முடிவதற்கு இன்னும் சில மணி நேரங்களே இருந்தது. துர்வாசர் வர நேரமானதால் வேதியர்களிடமும், அந்தணர்களிடமும் ஆலோசனை கேட்டான்.

அதாவது துவாதசி நேரம் முடியவதற்கு இன்னும் சில நிமிடங்களே உள்ளது. என்ன செய்யலாம் என்பதை குறித்து அவர்களது கருத்தை கேட்டான். அம்பரீசனின் தலைமைப் பண்டிதர் கூறிய ஆலோசனைப்படி, உள்ளங்கை அளவு தீர்த்தத்தை மூன்றுமுறை குடித்து தன் விரதத்தை பூர்த்தி செய்துவிட்டு முனிவருடன் சேர்ந்து உணவருந்துவதற்காக காத்திருந்தான் அம்பரீசன்.

இவனுடைய செயலை தன்னுடைய ஞானதிருஷ்டியால் அறிந்த துர்வாசர் மிகுந்த கோபமடைந்தார். உடனே, முனிவர் ஒரு பூதத்தை வரவைத்து, அம்பரீசனை கொல்லுமாறு ஆணையிட்டார்.

இந்த பூதத்தைக் கண்ட அந்த மன்னன் பயந்து பரிமளரங்கநாதரிடம் சென்று, பெருமாளே உனக்காக ஏகாதசி விரதம் இருக்கக்கூடாது என்பதற்காக ஏவப்பட்ட பூதத்திடம் இருந்து என்னை காப்பாற்று என்று அவருடைய பாதத்தில் சரணடைந்தான்.

அவனுக்கு அருள்புரிய பெருமாள் எண்ணி, அந்த பூதத்தை கோபத்துடன் விரட்டினார். இதையறிந்த துர்வாசர் பெருமாளிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டினார்.
அவரும் அந்த முனிவரை மன்னித்து, அவருடைய கர்வத்தை அடக்கினார். அப்போது பெருமாள் மன்னனிடம், வேண்டியதை கேள் என்றார்.
அதற்கு அம்பரீசன், தாங்கள் இத்தலத்தில் வீற்றிருந்து வருகின்ற பக்தர்களின் குறையை கேட்டு அருள்புரிய வேண்டும் என்றான்.
பெருமாளும் அம்பரீசனின் விருப்பப்படி, இத்தலத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார்.

மயிலாடுதுறை - தரங்கம்பாடி சாலையில் 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது இத்திருக்கோவில்.

**A s Govinda rajan**
KODAMBAKKAM CHENNAI

**தினம் ஒரு தலைவர்கள்**

# பழசி இராசா வரலாறு

வீர கேரள வர்மா பழசி இராசா (Pazhassi Raja, அல்லது கேரளச் சிங்கம், சனவரி 3, 1753 நவம்பர் 30, 1805) கேரளாவின் வடக்கில் உள்ள கண்ணூர் மாவட்டத்திலுள்ள தற்கால கூத்துப்பரம்பு பகுதியில் அமைந்துள்ள கோட்டயம்-மலபார் நாட்டின் மன்னராக இருந்தவர். பிரித்தானியக் குடியேற்றவாதத்தை எதிர்த்துப் போராடிய துவக்க கால விடுதலை வீரர்களில் ஒருவர். பிரித்தானியர்களுக்கு எதிராக அவர் நிகழ்த்திய மறைவுத் தாக்குதல்களில் உயிர்விட்டதை அடுத்து அவருக்கு வீர என்ற அடைமொழி வழங்கப்பட்டது.

பழசிராசாவின் இளமைக்காலம் பற்றிய குறிப்புகள் கிடைப்பதில்லை. துவக்கத்தில் பிரித்தானியருக்கு திப்பு சுல்தானுடன் நடந்த சண்டையில் உதவிய பழசிராசா பின்னர் அவர்களுடன் பிணக்கு கொண்டார். விடுதலை போராட்டமாக இல்லாது அவர்களது வரிவிதிப்பிற்கு எதிரான புரட்சியாக 1793 1797 காலகட்டங்களில் வெடித்ததாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

பழசி குடீரம்-வயநாட்டில் மானந்தவாடியில் பழசிராசா இறந்த இடத்தில் எழுப்பப்பட்டுள்ள நினைவகம்
கேரளாவை ஹைதர் அலி, பின்னர் திப்பு சுல்தான் ஆண்டு வந்தபோது நிலக்கிழார்களை தவிர்த்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக வரிவசூல் செய்து வந்தனர். பழசிராசாவின் துணையுடன் திப்புவிடமிருந்து கேரளாவை வென்ற பிரித்தானியர் இதனை மாற்றி மன்னர்களிடமிருந்து வரி பெறும் முறையை கொண்டு வந்தனர். பிரித்தானியர் வசூலித்த வரிகள் மக்களால் கொடுக்க வியலாத அளவில் இருந்தன. மக்களின் எதிர்ப்புகளை யடுத்து மன்னர்களால் வரிவசூல் செய்ய இயலவில்லை. தவிர கோட்டயத்தை அடுத்திருந்த பகுதிகளை பழசிராசாவிற்கு கொடுக்காமல் அவரது மாமனுக்கு குத்தகை விட்டனர். இதனால் தன்னை அவமதித்ததாக கருதிய பழசிராசா மக்களிடம் வரி வசூலிப்பதை நிறுத்தினார். இது பிரித்தானியர்களுக்கு உடன்பாடில்லாவிடினும் பழசிராசாவின் மக்கள் ஆதரவை கண்டு ஓர் ஆண்டு வரிவிலக்கு அளித்தனர். ஆனால் பழசிக்கு கோபமூட்டுமுகமாக மாமனின் குத்தகையை ஐந்தாண்டுகளுக்கு நீட்டினர். இதன் எதிர்விளைவாக சூன் 28,1795 நாள் முதல் அனைத்து வரிவசூலையும் நிறுத்தியதோடன்றி பிரித்தானியரால் புரட்சியாளர்களாக காணப்பட்டவர்களுக்கு புகலிடம் கொடுத்தார்.

பிரித்தானிய படைகள், லெப்.கார்டன் தலைமையில் கோட்டய அரண்மனையை சுற்றி வளைத்தது. ஆனால் அதன் முன்னரே பழசிராசா தப்பி விட்டார். பிரித்தானியப் படை அவருடன் பேசி மீண்டும் திரும்ப உடன்பட்டபோதிலும், ஓர் தவறெண்ணத்தால் வயநாட்டின் மலைப்பகுதிகளுக்கு



தப்பினார். 1797ஆம் ஆண்டு பல சிறு தாக்குதல்கள் மூலம் பல பிரித்தானிய வீரர்களை கொன்றார். பழசியை எதிர்க்க முடியாத பிரித்தானியர் அவருடன் உடன்பாடு கொண்டு அவரது மாமனின் குத்தகையை இரத்தாக்கினர். அமைதியாக பிரித்தானியருடன் வாழ பழசி இணங்கினார்.

1799 இல், திப்புவின் சீரங்கப்பட்டணம் வீழ்ந்த பிறகு ஆங்கிலேயர் வயநாடு பகுதிகளை தமதாக்கிக் கொண்டனர். இதனை எதிர்த்து மீண்டும் ஆங்கிலேயருடன் சூன் 1800 இல் சண்டையிடத் துவங்கினார். பிரித்தாளும் குணம் கொண்ட ஆங்கிலேயர் பழசிராசாவை அவரது மலபார் ஆதரவாளர்களிடமிருந்து பிரித்தனர். இதனால் பழசிராசா தனது மிக அணுக்க நண்பர்களுடனும் மனைவியுடனும் காடுகளில் வசிக்க வேண்டியதானது. மட்டனூர் அருகிலுள்ள புரலிமலை புரட்சி போராட்டங்களுக்கு மையமாக விளங்கியது.

அவரது துணைவர்கள் சுழலி,பெருவாயல் நம்பியார் மற்றும் கன்னவத்து சங்கரன் நம்பியார் முதலானவர் பிடிபட்டுத் தூக்கிலிடப்பட்டும் தனது மறைமுகத் தாக்குதல்களை நிறுத்தவில்லை. 1802ஆம் ஆண்டு எடச்சேன கங்கன் நாயர் மற்றும் தலக்கால் சந்து பனமரம் கோட்டையை முற்றுகையிட்டு அங்கிருந்த 25 ஆங்கிலேயரை கொன்று வெற்றிக் கொடி நாட்டினர். இந்நிகழ்வு எதிர்ப்பு இயக்கத்திற்கு புத்துயிர் தந்தது.

இந்த நேரத்தில் வரியை உயர்த்தியதால் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இதனைப் பயன்படுத்திய பழசிராசா படையினர் ஆங்கிலேயருக்கு அதிக சேதம் விளைவித்தனர்.

1804ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்ற தாமஸ் ஆர்வி பாபர், பழசிராசாவிற்கு துணைபோவது சட்டவிரோதம் எனவும் புரட்சியாளர்களின் நடமாட்டத்தை ஆங்கிலேயருக்கு தெரிவிப்பது கடமை என்றும் அறிக்கை விட்டார். சூன் 16 அன்று பழசிராசா மற்றும் அவரது துணைவர்களை பிடிப்பவர்களுக்கு பரிசும் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தலைக்கால் சந்து பிடிபட்டார்.

நவம்பர் 30,1805 அன்று பாபர் நேரடியாக பழசிராசாவினை சுற்றிவளைத்தார். ஆனால் பழசிராசா தனது மோதிரத்தை விழுங்கி ஓர் சிற்றாற்றின் கரையில் தற்கொலை செய்துகொண்டார். மன்னரின் உடல் அதற்குரிய மரியாதைகளுடன் எரிக்கப்பட்டது.

பழசிராசாவின் வரலாற்றினை மலையாள இயக்குநர் ஹரிஹரன் திரைப்படமாக தயாரித்து மம்முட்டி, சரத் குமார், சுரேசுகோபி, மனோஜ் கே ஜயன் முதலானவர் நடித்து தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு மற்றும் இந்தி என ஐந்து மொழிகளில் வெளியிடப்பட்டது.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை புதன்கிழமை 22.04.2026

# இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்கள் விடுதலை



**கொழும்பு, ஏப்.22:**

இந்தியா-இலங்கை இடையிலான உறவில் மீனவர்கள் விவகாரம் பெரும் சிக்கலான ஒன்றாக தொடர்ந்து நீடித்து வருகிறது. எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்யும் சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன.

இலங்கைக் கடற்படை வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்த ஆண்டில் இதுவரை இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக மீன்பிடித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் 128 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதே சமயம், இந்திய கடற்படையும் இலங்கை மீனவர்களை தொடர்ந்து கைது செய்து வருவதாக அந்நாட்டின் கடற்படை குற்றம் சாட்டி வருகிறது. இந்த நிலையில், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்கள் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தகவல் தெரிவித்துள்ளது. அவர்கள் இன்றே தங்கள் தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் போரால் எரிசக்தி விநியோகம் பாதிப்பு: பயோ காஸ், சூரிய மின்சக்தி திட்டங்களில் இந்திய ராணுவம் தீவிரம்

**புதுடெல்லி, ஏப்.22:**

மேற்கு ஆசிய போரால் எரிசக்தி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பயோ காஸ் மற்றும் சூரிய மின்சக்தி திட்டங்களில் இந்திய ராணுவம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.



இதுகுறித்து மூத்த ராணுவ அதிகாரிகள் கூறியதாவது: சமையலுக்கு தேவையான மாற்று எரிசக்தி ஆதாரங்களை நோக்கி ராணுவம் விரைவாக நகர்ந்து வருகிறது. பயோ காஸ் அடுப்புகளை கொள்முதல் செய்வதற்கான உத்தரவுகள் ஏற்கெனவே தயார் நிலையில் உள்ளன.

ராணுவம் முழுவதிலும் தினமும் சுமார் 1,56,000 கிலோ சமையல் எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. இதில் சுமார் 20%, அதாவது நாளொன்றுக்கு சுமார் 30,000 கிலோ சமையல் எரிவாயுவை பயோ காஸ் மூலம் மட்டுமே சேமிக்க முடியும்.

தற்போது ஒவ்வொரு வீரருக்கும் சமையலுக்காக நாள் ஒன்றுக்கு 125- 135 கிராம் எரிவாயு ஒதுக்கப்படுகிறது. இது தவிர, நிர்வாக, செயல்பாடு மற்றும் பயிற்சி நோக்கங்களுக்காக 2 லட்சத்துக்கும் அதிகமான பல்வேறு வகை வாகனங்களை ராணுவம் இயக்குகிறது. இதனால் தினமும் பெருமளவு எரிபொருள் நுகர்வு ஏற்படுகிறது.

இந்த சுமையைக் குறைக்க, நிர்வாக ரீதியான ராணுவப் படைகளின் பயணத்தை 400 கி.மீ தூரமாக கட்டுப்படுத்தலாமா என்றும், அதற்கு மேற்பட்ட தூரத்துக்கு ரயில் போக்குவரத்தை அதிகபட்சமாக பயன்படுத்தலாமா என்றும் ஆலோசிக்கப்பட்டு வாகனங்களைப் பகிர்ந்து கொள்வது, உணவுப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் படை வீரர்களை ஏற்றிச் செல்லுதல் போன்ற பணிகளை ஒருங்கிணைப்பதும் பரிசீலனையில் உள்ளது. சாத்தியமான இடங்களில் சிஎன்ஜி அல்லது வாடகை மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவது ஊக்குவிக்கப்படும். இவ்வாறு ராணுவ அதிகாரிகள் கூறினர்.

சூரிய மற்றும் பயோ காஸ் ஆலைகளுக்காக சுமார் 46,000 ஏக்கர் பாதுகாப்புத்துறை நிலத்தைப் பயன்படுத்த ஆயுதப் படைகள் திட்டமிட்டுள்ளதாக கடந்த ஆண்டு டிசம்பரில் செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடகத்தில் மதுபானங்களின் விலை மீண்டும் உயர்வு?

**பெங்களூர், ஏப்.22:**

கர்நாடகத்தில் காங்கிரஸ் அரசு அமைந்த பின்பு மதுபானங்களின் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. 5 உத்தரவாத திட்டங்களுக்கு நிதி தேவைப்படுவதால் மதுபானங்களின் விலையை அரசு உயர்த்தியது. இதற்கு மதுப்பிரியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், 2026-27-ம் ஆண்டு பட்ஜெட்டை தாக்கல் செய்த முதல்-மந்திரி சித்தராமையா, நாட்டிலேயே முதல் முறையாக கர்நாடகத்தில் ஆல்கஹாலின் அளவை பொறுத்து (ஆல்கஹால் இன் பேவரேஜ்) மதுபானங்கள் மீது வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். பட்ஜெட்டில் அறிவித்தபடி ஆல்கஹாலின் அளவுக்கு ஏற்றார் போன்று வரி விதிக்கும் முறையை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான அரசாணையும் நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

இதனால் மதுபானங்களின் விலை 20 சதவீதம் வரை அதிகரிக்ககூடும் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. குறிப்பாக குறைவான விலை கொண்ட மதுபானங்களின் விலை உயர்த்தப்பட இருப்பதாக தெரிகிறது. 180 மில்லி அளவுள்ள மதுபானங்களின் விலை ரூ.80-ல் இருந்து ரூ.95-க்கு விற்கப்பட உள்ளது. இதுதவிர ரூ.5 முதல் ரூ.10 வரை பிற மதுபானங்களின் விலை உயரலாம் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. நாட்டிலேயே மதுபானங்களில் உள்ள 'ஆல்கஹால்' அளவை பொறுத்து வரி விதிக்கப்படுவது கர்நாடகத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது..

# பிரதமர் மோடியின் காரப்பொரி வீடியோ 100 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை

**ஜர்கிராம், ஏப்.22:**

மேற்கு வங்காள அரசின் பதவிக்காலம் மே 7-ந்தேதியுடன் நிறைவடைகிறது. இதனை தொடர்ந்து, மேற்கு வங்காள சட்டசபை தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறுகிறது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்படும். வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதனையடுத்து, மேற்கு வங்காளத்தின் ஜர்கிராம் நகரில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோது, திடீரென வாகனத்தில் இருந்து இறங்கிய பிரதமர் மோடி, சாலையோரம் இருந்த கடைக்கு சென்று, ஆர்வத்துடன் காரப்பொரி கேட்டு வாங்கி சாப்பிட்டார்.

அந்த கடையில் மிக்சர், பொரி, உள்ளிட்ட பல்வேறு பண்டங்களும் தூய்மையான முறையில், வரிசையாக பாட்டிலில், அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. அவரை பார்த்த ஆச்சரியத்தில் குழந்தைகளும், பெண்களும் கடையின் முன் குவிந்தனர்.

இதுபற்றிய வீடியோ ஒன்று இன்ஸ்டாகிராமில் வைரலானது. அந்த வீடியோ 100 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை படைத்துள்ளது. பேஸ்புக்கில் 90 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை படைத்துள்ளது. அதனுடன் நில்லாமல், காரப்பொரியை பற்றி தெரிந்து கொள்ளும் ஆர்வமும் மக்களிடையே அதிகரித்து உள்ளது.

கூகுளில் காரப்பொரியை பற்றிய தேடல் 22 ஆண்டுகளில் இல்லாத வகையில் உச்சமடைந்து இருந்தது. பலரும் அது என்ன வகையான பண்டம் என ஆவலுடன் பார்த்துள்ளனர்.

# மோசமான வானிலை: விமானம் வானில் வட்டமடித்ததால் பயணிகள் பீதி

**ஹுப்பள்ளி, ஏப்.22:**

பிளை 91 ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான ஏடிஆர் ரக விமானம் ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு புறப்பட்டது. மாலை 4.30 மணிக்கு கர்நாடகாவின் ஹுப்பள்ளியை நெருங்கியதும் மோசமான வானிலை காரணமாக தரையிறங்க முடியவில்லை.

வானிலை சீரடைவதற்காக அந்த விமானம் கர்நாடகாவின் முந்காட், தேவனகிரி மற்றும் சிவமோகா ஆகிய பகுதிகளில் வட்டமடித்துக் கொண்டிருந்தது. விமானம் தரையிறங்காமல் வெகு நேரம் சுற்றியதால் பயணிகள் பீதியடைந்தனர். அப்போது பைலட் "மோசமான வானிலையால் வானில் தொடர்ந்து பறந்து கொண்டிருக்கிறோம். வானிலை சீரடைந்ததும் தரையிறங்கலாம். இதுகுறித்த தகவலை அவ்வப்போது தெரிவிப்போம். பொறுமையாக இருந்து, விமான ஊழியர்கள் சொல்வதை பின்பற்றவும்" என தெரிவித்தார்.

அதற்குள் பதற்றமடைந்த பயணிகள், "பெங்களூருக்கு செல்லும்படி பைலட்டிடம் கூறுங்கள், அல்லது பெல்ஹாம் போகலாம்" என ஒரு பயணி கூறியுள்ளார். "ஆமாம். பெல்ஹாம் அருகில்தான் உள்ளது" என மற்றொரு பயணி கூறினார். ஒன்றரை மணி நேரத்தில் தரையிறங்க வேண்டிய விமானம், தொடர்ந்து 4 மணி நேரத்துக்கு மேல் பறந்ததால் பயணிகள் இடையே அச்சம் அதிகரித்தது. ஒரு பெண் பயணி கைகளை கூப்பி பிரார்த்தனை செய்தபடி அழ ஆரம்பித்தார். அவரது உடல் நடுங்கத் தொடங்கியது.

ஓ.. மை காட் என பல பயணிகள் கூறும் சத்தம் விமானத்துக்குள் எடுக்கப்பட்ட வீடியோவில் பதிவானது. அழ வேண்டாம், ஒன்றும் ஆகாது, பொறுத்திருங்கள் என மற்றொருவர் கூறும் சத்தமும் கேட்டது. ஹுப்பள்ளியில் தரையிறங்க விமானம் பல முறை முயன்றும், இறங்க முடியவில்லை. அதனால் அந்த விமானம் கடைசியாக பெங்களூரு திருப்பிவிடப்பட்டு, கெம்பேகவுடா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் 7.30 மணிக்கு தரையிறங்கியது. அதன்பின்பே பயணிகள் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

# பிரதமர் மோடி துவக்கி வைக்க உள்ள சுத்திகரிப்பு ஆலையில் இருந்து கிளம்பிய புகை

**ஜெய்ப்பூர், ஏப்.22:**

ராஜஸ்தானின் பலூத்ரா நகரில் பச்பத்ரா பகுதியில் இந்தியாவின் முதல் பசுமைவெளி ஒருங்கிணைந்த சுத்திகரிப்பு ஆலை ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது. ராஜஸ்தான் அரசுடன் இணைந்து, இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் இதனை செயல்படுத்த உள்ளது.

பிரதமர் மோடி இதனை இன்று துவக்கி வைக்க இருந்த நிலையில், திடீரென இதில் இருந்து புகை கிளம்பியது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. அந்த கரும்புகை வான் வரை பரவியது. எனினும், அதிகாரிகள் உடனடியாக செயல்பட்டு, அதனை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இறக்குமதியை சார்ந்திராமல் உள்நாட்டு உற்பத்தி திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்த ஆலை அமைக்கப்பட்டு உள்ளது. இது, இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சூழலில், இந்த சுத்திகரிப்பு ஆலையை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிப்பதற்கான திட்டம் ஒத்தி வைக்கப்பட்டு உள்ளது.

# மோசமான வானிலையிலும் கண்காணிக்க புதிய இலகுரக விமானம் வாங்க மத்திய அரசு திட்டம்

**புது டெல்லி, ஏப்.22:**

கடுமையான சுற்றுச்சூழல் நிலைமைகளிலும், கடல் மட்டத்திலிருந்து 16,400 அடி உயரம் வரையிலும் செயல்படக்கூடிய, இந்திய விமானப்படையின் உயரடுக்கு சிறப்புப் படைப்பிரிவிற்கான சிறிய ஆளில்லா இலகுரக விமானம் ஒன்றை கொள்முதல் செய்யும் செயல்முறையை பாதுகாப்பு அமைச்சகம் தொடங்கியுள்ளது.

கருட் சிறப்புப்படைகளுக்காக 'மைக்ரோ யுஏவி' அமைப்பைக் கொள்முதல் செய்வது குறித்து அமைச்சகம் சமீபத்தில் தகவல் கோரிக்கை ஒன்றை வெளியிட்டது. தற்போதுள்ள மைக்ரோ அமைப்பைக் காட்டிலும், அதிக உயரப்பகுதிகளில் அதிக நிலைத்தன்மையுடன், மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் இலக்கு கண்டறியும் அம்சத்துடன், சிறப்புப் படைகளுக்கு உகந்த, சிறிய, ராணுவத் தரத்திலான, இலகுரக, எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய அமைப்பு தேவைப்படுகிறது.

இந்த விமானம், மோசமான சுற்றுச்சூழலிலும், கடல் மட்டத்தில் இருந்து 16,400 அடி உயரம் வரையிலும் இயங்கக்கூடியது. அதிக உயரத்திலும், மோசமான வானிலையிலும் கண்காணிப்பு பணியை மேற்கொள்ளும் நோக்கத்தில் இந்த விமானங்களை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. இது, குறைந்தபட்சம் 15 கி.மீ. தூரத்தில், 60 நிமிடங்களுக்கு குறையாமல் பறந்து கண்காணிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# படுக்கை அறையில் தூங்கிக்கொண்டிருந்த சிறுவன் பாம்பு கடித்து பலி

**திருவனந்தபுரம், ஏப்.22:**

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் கொடாலி பகுதியில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சிறுவன் பாம்பு கடித்து உயிரிழந்த சம்பவம் அந்தப் பகுதியையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

திருச்சூர் கோடாலி பகுதியை சேர்ந்த சில்ஜோ, ஜோண்ஷி தம்பதியின் மகன்கள் அனோத் (10), ஆல்ஜோ (8). நேற்று முன்தினம் இரவு மகன்கள் இருவரும் அவர்களது அறையில் தூங்கிகொண்டிருந்தபோது சிறிது நேரத்தில் இளையமகன் ஆல்ஜோ என்னை எதுவோ கடித்துவிட்டது என்று கூறியுள்ளான். மேலும், உடம்பு வலிக்கிறது மற்றும் வாந்தி வருவதுபோல் இருக்கிறது என பெற்றோர்களிடம் தெரிவித்துள்ளான். இதை கவனிக்காத பெற்றோர் காலையில் பார்த்துக்கொள்ளலாம் தூங்கு என்று கூறியுள்ளனர். நேற்று காலையில் ஆல்ஜோவை எழுப்பியபோது அவன் பேச்சு மூச்சு இல்லாமல் படுக்கையில் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் சிறுவனை அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர்.

அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் ஆல்ஜோ ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். இதையடுத்து, சிறுவர்கள் படுத்திருந்த அறையை சோதனை செய்தனர். அப்போது, ஆல்ஜோ படுத்திருந்த தலையணையை தூக்கி பார்த்த போது அங்கு 2 அடி நீளம் கொண்ட கட்டுவிரியன் பாம்பு உயிருடன் இருப்பதைக் கண்டுபிடித்தனர். இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த திருச்சூர் நகராட்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தென்கொரிய அதிபர் மியுங் - பிரதமர் மோடி சந்திப்பு

**புதுடெல்லி, ஏப்.22:**

இந்தியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030-க்குள் 5,000 கோடி டாலராக (சுமார் ரூ. 4.6 லட்சம் கோடி) இரட்டிப்பாக்க இரு நாடுகளும் உறுதி பூண்டுள்ளன. தென்கொரிய அதிபர் லீ ஜே மியுங், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார்.



எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தென்கொரிய அதிபர் ஒருவர் இந்தியா வருவது இதுவே முதல்முறையாகும். பிரதமர் மோடியுடன் அவர் நேற்று நடத்திய ஆலோசனைகளுக்குப் பிறகு, பொருளாதார உறவுகளில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளதாக இரு நாட்டு தலைவர்களும் அறிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அதிபர் லீ ஜே மியுங் கூறும்போது, "இரு நாடுகளின் பொதுவான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார ஒத்துழைப்புக்கான புதிய கட்டமைப்பை உருவாக்க முடிவு செய்துள்ளோம். இதற்காக முதன்முறையாக அமைச்சர் அளவிலான பொருளாதார ஒத்துழைப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அணுமின் நிலையங்கள் மற்றும் பசுமை எரிசக்தி துறைகளில் முதலீடுகள் பலப்படுத்தப்படும்" என்றார். பிரதமர் மோடி பேசுகையில், "அதிபர் லீ-யின் வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

தற்போது 2,700 கோடி டாலராக உள்ள இருதரப்பு வர்த்தகத்தை அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ.4.6 லட்சம் கோடியாக உயர்த்த முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய கலாச்சாரத் தொடர்புகளைக் கொண்ட நாம், அடுத்த பத்தாண்டு கால வெற்றிக்கான அடித்தளத்தை இன்று அமைத்துள்ளோம்" என்றார்.

# இந்தியாவில் புதிய ஒப்பந்தம் அமலுக்கு வந்தது

**புதுடெல்லி, ஏப்.22:**

இந்தியா-ரஷியா இடையே பரஸ்பர தளவாட பரிமாற்ற ஒப்பந்தம் (ரெலோஸ்) ரஷிய தலைநகர் மாஸ்கோவில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் கையொப்பமானது. இந்த ஒப்பந்தம் தற்போது அமலுக்கு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தியாவில் 5 ஆண்டுகாலம் வரை 3,000 ரஷிய ராணுவ வீரர்கள் தங்கியிருப்பர். 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 ரஷிய போர் விமானங்கள் நிலைநிறுத்தப்படும். இது அமைதி காலம், யுத்த காலத்துக்கும் பொருந்தும்.

இதேபோல், ரஷியாவிலும் இந்திய ராணுவ வீரர்கள் 3,000 பேர் தங்கியிருப்பர். 5 இந்திய போர்க் கப்பல்களும், 10 இந்திய போர் விமானங்களும் 5 ஆண்டு காலம் நிலைநிறுத்தப்படும். 2 நாடுகளும் தத்தமது ராணுவத் தளங்கள், கடற்படைத்தளங்கள், விமான தளங்களை பிற நாடுகள் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவும், ரஷியாவும் விரும்பினால், இந்த 5 ஆண்டு காலத்தை மேலும் 5 ஆண்டு காலம் நீட்டித்துக்கொள்ளவும் ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், இந்தியா-ரஷியா இடையே ராணுவ ரீதியான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதும், தளவாட பரிமாற்றத்தை அதிகரிப்பதுமே ஆகும். இந்த ஒப்பந்தம், உலகளாவிய அளவில் தற்போது அதிக கவனம் ஈர்த்துவரும் பிரதேசமான ஆர்டிக் பிரதேசத்தில் இந்தியா தனது செல்வாக்கை விரிவுபடுத்த உதவும். அதேபோல் ரஷியாவுக்கு அதன் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புதல், உதிரிபாகங்கள் பெறுதல், பழுதை சரிசெய்தல் போன்ற பணிகளுக்கு உதவும். மேலும், இந்திய பெருங்கடல் பிரதேசத்தில் வரும் அதன் போர்க் கப்பல்கள், வர்த்தக கப்பல்களுக்குத் தேவையான உதவிகளைப் பெறவும் உதவும்.

ஏற்கெனவே இதேபோன்ற ஒப்பந்தத்தை (லெமோவா) அமெரிக்காவுடனும் இந்தியா செய்துள்ளது. ஆனால், அந்த ஒப்பந்தத்தில் இந்தியாவில் அமெரிக்க வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட வழிவகை செய்யப்படவில்லை. அதேபோல் அமெரிக்காவிலும் இந்திய வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட வழிவகை செய்யப்படவில்லை.

இந்தியாவின் நீண்டகால நெருங்கிய நட்பு நாடாகவும், சர்வதேச அளவில் நம்பகமான கூட்டாளி நாடாகவும் ரஷியா திகழ்வதால் அந்நாட்டுக்கு மட்டும் வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்களை நிறுத்த அனுமதி தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சத்தீஸ்கரில் விமான விபத்தில் 2 பைலட் உயிரிழப்பு



**ஜாஷ்பூர், ஏப்.22:**

சத்தீஸ்கரின் ஜாஸ்பூர் மாவட்டத்தில் தனியார் விமானம் ஒன்று மலைப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த இரு பைலட்டுகளும் உயிரிழந்தனர். தனியார் நிறுவனத்தை சேர்ந்த ஒற்றை இன்ஜின் சிறிய ரக விமானம் ஒன்று சத்தீஸ்கரின் ஜாஸ்பூர் மாவட்டத்தில் நேற்று பறந்து சென்றது. சுமார் 30 அடி உயரத்தில் தாழ்வாக பறந்து சென்ற விமானம், மரத்தில் மோதி கீழே விழுந்ததாக விமான விபத்தை பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் 2 பைலட்டுகளும் உயிரிழந்தனர். விமான விபத்து நடைபெற்ற இடத்துக்கு மீட்பு குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.




## தருமபுரி | விவசாயி கொலையில் 6 பேருக்கு ஆயுள்

**தருமபுரி, ஏப்.22:** தருமபுரி மாவட்டம் நல்லம் பள்ளி ஒன்றியம் ஊத்துப்பள்ளம் சிவாடி காட்டுவளவு பிரிவு சாலை பகுதியைச் சேர்ந்தவர் சரவணன் (45). அதே பகுதியைச் சேர்ந்தவர் முனுசாமி.

இவர்கள் இருவருக்கும் விவசாய நிலம் தொடர்பாக முன்விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் கடந்த 2022 ஆக.4-ம் தேதி சரவணனை முனுசாமி, அவரது உறவினர்கள் நவீன், காமராஜ், விஜயன், முத்து, மாதேஷ் ஆகியோர் தாக்கியதில் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதுதொடர்பாக தொப்பூர் போலீஸார் பதிவு செய்த வழக்கு தருமபுரி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கின் விசாரணை முடிவுற்ற நிலையில், குற்றம் சாட்டப்பட்ட 6 பேருக்கும் ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.5,000 அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

## திருப்பரங்குன்றத்தில் வாக்காளர்களுக்கு பணப் பட்டுவாடா புகார்: திமுக நிர்வாகி ரூ.50 லட்சத்துடன் கைது

**மதுரை/ காரைக்குடி, ஏப்.22:** திருப்பரங்குன்றத்தில் வாக்காளர்களுக்கு பணம் விநியோகித்த புகாரில் திமுக நிர்வாகி கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ.50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. இதேபோல் காரைக்குடியில் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை பறித்துச்சென்ற கும்பலை போலீஸார் தேடி வருகின்றனர்.

சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் இன்றுடன் முடிவதாலும், வாக்குப்பதிவுக்கு 2 நாட்களே இருப்பதாலும் பல இடங்களில் வாக்காளர்களுக்கு கட்சியினர் பணம் வழங்கி வருவதாக புகார் எழுந்துள்ளது.

திருப்பரங்குன்றம் பாம்பன் நகர் பகுதியைச் சேர்ந்தவர் திமுக தொண்டரணி அமைப்பாளர் நாகலிங்கம். இவர் கோடாங்கித் தோப்பு தெருவில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வாக்காளர்களுக்கு பணம் விநியோகிப்பதாக பறக்கும் படையினருக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக அப்பகுதிக்குச் சென்ற பறக்கும் படையினர், நாகலிங்கத்தை பிடித்து ரூ.50 லட்சத்தை பறிமுதல் செய்தனர்.

பின்னர், அவரையும் பறிமுதல் செய்யப்பட்ட பணத்தையும் போலீஸாரிடம் ஒப்படைத்தனர். நாகலிங்கம் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து, அவரை கைது செய்தனர். கைப்பற்றப்பட்ட பணம் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இதேபோல் காரைக்குடியில் கார்த்தி சிதம்பரம் எம்.பி. அலுவலகத்தில் வாக்காளர்களுக்குக் கொடுப்பதற்காக பணம் வைத்திருப்பதாக தேர்தல் அதிகாரிகளுக்கு புகார் வந்தது. இதையடுத்து, வட்டாட்சியர் தர்மலிங்கம் தலைமையிலான தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் அங்குசென்றனர்.

தொடர்ந்து அலுவலகத்தில் அவர்கள் சோதனையிட்டபோது, கட்டுக்கட்டாக பணம் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்து, எடுத்துச் செல்ல முயன்றனர். அப்போது அங்கிருந்த பழனியப்பன் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினர் பணத்தை முறையாக எண்ணி, எவ்வளவு எடுத்துச்செல்கிறோம் என்று தெரிவிக்க வேண்டுமெனத் கோரினர்.

இதைத் தொடர்ந்து காரில் வைத்து அதிகாரிகள் பணத்தை எண்ணினர். அதில் ரூ.13.40 லட்சம் இருந்தது. அப்போது அங்கிருந்த காங்கிரஸார் இது எம்.பி. அலுவலகத்தில் பல்வேறு செலவுகளுக்காக வைத்திருந்த பணம், அதை எப்படி எடுத்துச் செல்லலாம் என்று வாக்குவாதம் செய்தனர்.

அதேசமயத்தில் அதிகாரிகளிடமிருந்த பணத்தைப் பறித்து கொண்டு இருவர் இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர். மேலும், அவர்களை விரட்டிப் பிடிக்க அதிகாரிகள் காரை எடுக்க முயன்றபோது தப்பி ஓடியவர்கள் கார் சாவியையும் எடுத்துச் சென்றது தெரியவந்தது.

இதனால் அதிகாரிகள் செய்வதறியாமல் தவித்தனர். தவலறிந்து வந்த காரைக்குடி உதவி காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ்புனியா, வட்டாட்சியர் ராஜா ஆகியோர் விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து வட்டாட்சியரின் புகாரின்பேரில், காரைக்குடி வடக்கு போலீஸார் வழக்குப் பதிந்து, அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்த பழனியப்பனை பிடித்து விசாரித்தனர்.

தப்பியோடியவர்களையும் போலீஸார் தேடி வருகின்றனர். இதனிடையே மாவட்ட எஸ்பி சிவபிரசாத் விசாரணை செய்தார். மேலும் அவர் கூறுகையில், தேர்தல் அதிகாரிகள் வாகன கேமராவில் பதிவான காட்சி அடிப்படையில் பணத்தைப் பறித்துச்சென்ற நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

## கணவனை கொன்று புதைத்த வழக்கில் மனைவி, கள்ளக்காதலனுக்கு இரட்டை ஆயுள் தண்டனை

**ஊட்டி, ஏப்.22:** கணவனை கொன்று புதைத்த மனைவி மற்றும் கள்ளக்காதலனுக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்து ஓசூர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஜஸ்டின் ராஜசேகர் (32). இவரது மனைவி இந்து சன்னி (25). இவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மத்திகிரி அருகே உள்ள மத்தம் அக்ரஹாரம் கிராமத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தனர்.

இந்நிலையில், இந்து சன்னிக்கும் கூடலூர் பகுதியைச் சேர்ந்த லிண்டோ ஜோசப் (30) என்பவருக்கும் இடையே தகாத உறவு ஏற்பட்டுள்ளது. இதனையறிந்த ஜஸ்டின் ராஜசேகர் கண்டித்துள்ளார். இதனால், இருவரும் சந்திக்க முடியாமல் தவித்து வந்தனர். தங்களது தகாத உறவுக்கு இடையூறாக உள்ள ஜஸ்டின் ராஜசேகரை தீர்த்துக் கட்டி விட்டு, மறுமணம் செய்து கொள்ள திட்டமிட்டனர்.

இதையடுத்து, கடந்த 19.08.2017 அன்று இரவு சுமார் 11 மணியளவில், திட்டமிட்டபடி இந்து சன்னியும், லிண்டோ ஜோசப்பும் இணைந்து, ஜஸ்டின் ராஜசேகரை அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்தனர். பின்னர், அவரது உடலை மத்திகிரி மயானத்திற்கு எடுத்துச் சென்று, யாருக்கும் தெரியாமல் புதைத்தனர்.

அதன் பின்னர், சில நாட்களில் அப்பகுதி கிராம நிர்வாக அலுவலர் கோபு முன்பு, இந்து சன்னி ஆஜராகி தனது கணவனை கொலை செய்து விட்டதாக தெரிவித்தார். இதுகுறித்த புகாரின் பேரில், மத்திகிரி போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன் வழக்குப்பதிந்து விசாரித்து, இந்து சன்னி மற்றும் அவரது கள்ளக்காதலன் லிண்டோ ஜோசப் ஆகிய இருவரையும் கைது செய்தார். இந்த வழக்கு ஓசூர் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

வழக்கின் அனைத்து சாட்சிகள் மற்றும் ஆதாரங்களை ஆராய்ந்த நீதிபதி சந்தோஷ், நேற்று தீர்ப்பளித்தார். குற்றம்சாற்றப்பட்ட இந்து சன்னி மற்றும் லிண்டோ ஜோசப் ஆகிய இருவருக்கும் இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.10,000 அபராதம் விதித்தார்.

அபராத தொகையை கட்ட தவறினால், மேலும் கூடுதலாக ஒரு மாதம் சிறை தண்டனையும், தடயங்களை மறைத்த குற்றத்திற்காக 5 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.5,000 அபராதமும் விதித்தார்.

அபராத தொகையை கட்ட தவறினால், மேலும் ஒரு மாத சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென தீர்ப்பளித்தார். இந்த தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் அரசு தரப்பில் வழக்கறிஞர் சின்னபில்லப்பா ஆஜராகி வாதாடினார்.

# தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி ஏப்.23-ல் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை



**சென்னை, ஏப்.22:** தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் ஏப்.23-ம் தேதி அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்று தமிழக தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்குநர் செ.ஆனந்த் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ம் தேதி (வியாழன்) நடைபெற உள்ளது. இதையொட்டி, மாற்று முறை ஆவணங்கள் சட்டத்தின்படி அன்றைய தினம் தமிழக அரசு பொது விடுமுறை அறிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள அறிவுரைகளின்படி, தமிழகம் முழு

வதும் உள்ள தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தினக்கூலி தொழிலாளர்கள், தற்காலிக பணியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களும் வாக்களிக்க வசதியாக தேர்தல் நாளில் அவர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை வழங்குவது கட்டாயம் ஆகும்.

எனவே, அனைத்து தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்களும் வாக்குப்பதிவு நாளான ஏப்.23-ம் தேதி அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் விடுமுறை அளிக்க வேண்டும்.

அவ்வாறு விடுமுறை அளிக்கத் தவறும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் குறித்து புகார் செய்ய வசதியாக தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் சார்பில் மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புகார் தெரிவிக்க கட்டுப்பாட்டு அலுவலர்களை பொதுமக்கள், தொழிலாளர்கள் தொடர்பு கொள்ளலாம். அலுவலர்களின் பெயர், தொடர்பு எண் விவரம்: தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் எம்.வி.கார்த்திகேயன் (திருவொற்றியூர்) - 9444221011, எஸ்.கமலக்கண்ணன் (சென்னை) - 9884675712, நிர்வாக அலுவலர் எஸ்.சூரியா (சென்னை) - 9884470526, துணை இயக்குநர் த.மணிசங்கர் (காஞ்சிபுரம்) - 9940468249. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆம்னி பேருந்துகள் அதிக கட்டணம் வசூல் செய்தால் நடவடிக்கை

### போக்குவரத்து துறை எச்சரிக்கை



**சென்னை, ஏப்.22:** சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் எச்சரித்துள்ளது.

இது குறித்து போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் ஏப். 23 அன்று நடைபெறுவதை முன்னிட்டு (21.04.2026 முதல் 26.04.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப்பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் அடங்கிய சிறப்புக்குழு அமைக்கப்பட்டு, அவ்வாறு இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அனுமதி ரத்து போன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக தெரியவந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்காணும் அலைப்பேசி எண்கள் மூலம், வாட்ஸ் ஆப் / குறுஞ்செய்தி / குரல் பதிவு மூலமாக புகார் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1800 425 6151

இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (வடக்கு) 99442 53404

இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (தெற்கு) 97905 50052

இணைப்போக்குவரத்து ஆணையரகம், மதுரை 90953 66394

இணைப்போக்குவரத்து ஆணையரகம், கோயம்புத்தூர் 91235 93971

துணைப்போக்குவரத்து ஆணையரகம், விழுப்புரம் 96773 98825

துணைப்போக்குவரத்து ஆணையரகம், வேலூர் 98400 23011

துணைப்போக்குவரத்து ஆணையரகம், சேலம் 78456 36423

துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு 80569 40040

துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி 90660 32343

துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் 90257 23800

துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி 96981 18011

துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் 95850 20865

# 25 பேர் உயிரிழந்த விவகாரம் - விருதுநகர் பட்டாசு ஆலை உரிமையாளர் நீதிமன்றத்தில் சரண்



**விருதுநகர், ஏப்.22:** விருதுநகர் அருகே 25 பேர் உயிரிழந்த விவகாரத்தில், பட்டாசு ஆலை உரிமையாளர் விருதுநகர் நீதிமன்றத்தில் இன்று காலை சரணடைந்தார்.

விருதுநகர் அருகே உள்ள கட்டனார்பட்டியில் வனஜா பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடிவிபத்தில் 25 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இந்த ஆலையின் உரிமையாளர் முத்துமாணிக்கம், இவரது மனைவி ஈஸ்வரி ஆகியோர் மீது வச்ச காரப்பட்டி போலீஸார் வழக்கு பதிவு செய்து, தலைமறைவாக இருந்த இருவரையும் தேடி வந்தனர்.

இந்நிலையில், தேடப்பட்ட முத்து மாணிக்கம் விருதுநகர் முதலாவது நீதித்துறை நடுவர் மன்றத்தில் சரணடைந்தனர்.

இதனிடையே, இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்த தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கோவிந்தராவ் என்பவரை சிறப்பு விசாரணை அதிகாரியாக தமிழக அரசு நியமித்திருப்பது குறிப்பிடத்தகக்து.

# முதல்வர் குறித்து பழனிசாமியின் அவதூறு பேச்சால் பெங்களூரு புகழேந்திக்கு என்ன பாதிப்பு?

### மனுவை தள்ளுபடி செய்தது ஐகோர்ட்

**சென்னை, ஏப்.22:** புரட்சி அண்ணா திமுகவின் முதன்மைச் செயலாளரான பெங்களூரு வா.புகழேந்தி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருந்ததாவது:

முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச் செயலாளருமான பழனிசாமி, தேர்தல் பிரச்சாரத்தின்போது முதல்வர் மு.க.ஸ்டாலினை கரோனா காலகட்டத்தில் போயிருப்பார் என்றும், துணை முதல்வரான உதயநிதி ஸ்டாலினை பால்டாயில் குடித்தவர் என்றும் அவதூறாகவும், அநாகரீகமாகவும் பேசி வருகிறார்.

முதல்வர் மற்றும் துணை முதல்வர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களை பழனிசாமி அவதூறாகப் பேசி வருவதால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

அத்துடன் அவரது தேர்தல் பிரச்சாரத்துக்கும் தடை விதிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, “முதல்வர் ஸ்டாலின் குறித்து பழனிசாமியின் அவதூறு பேச்சால் பெங்களூரு புகழேந்திக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளது?'' என கேள்வி எழுப்பியதோடு, இந்த வழக்கைத் தொடர அவருக்கு எந்த முகாந்திரமும் இல்லை எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்தனர்.

# ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.18 கோடி தங்க நகைகள் பறிமுதல்

**சென்னை, ஏப்.22:** உரிய ஆவணங்கள் இன்றி பிரபல நகைக் கடைக்கு கொண்டு செல்லப்பட்ட ரூ.18 கோடி மதிப்பு நகைகளை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நாளை மறுநாள் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

பிரச்சாரம் இன்று முடிவடைய உள்ள நிலையில், தேர்தல் பறக்கும் படையினர் தங்கள் கண்காணிப்பை தீவிரப் படுத்தியுள்ளனர். சென்னை பூக்கடை ஏழு கிணறு பகுதியில் நேற்று காலை தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த வாகனம் ஒன்றை நிறுத்தி ஓட்டுநரிடம் விசாரித்தனர். அவர் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்ததால் வாகனத்தில் சோதனை நடத்தினர்.

அதில் ரூ.18 கோடி மதிப்புள்ள சுமார் 12 கிலோ 760 கிராம் தங்க நகைகள் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து, ஓட்டுநரான பரங்கிமலையைச் சேர்ந்த கிரண் (30) என்பவரை தனியாக அழைத்துச் சென்று விசாரித்தனர்.

அவர், தனியார் நிறுவனம் ஒன்றில் பணி செய்து வருவதாகவும், பல்லாவரத்தில் இருந்து ராயபுரம் பகுதியில் உள்ள பிரபல நகைக்கடையில் நகைகளை கொடுத்துவிட்டுவேறு ஒரு கடைக்கு நகைகளை கொண்டு செல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், அவரிடம் அந்த நகைகளுக்கான ஆவணங்கள் இல்லை. இதையடுத்து அந்த நகைகளை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

பின்னர், அதை வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். உரிய ஆவணங்களை காண்பித்து நகைகளை பெற்றுச் செல்லும்படி வாகன ஓட்டுநரான கிரனுக்கு அறிவுரை வழங்கி அவரை பறக்கும் படையினர் அனுப்பி வைத்தனர்.

# கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் எள் மூட்டைகளை கொள்முதல் செய்யாததை கண்டித்து விவசாயிகள் திடீர் சாலை மறியல்



**கள்ளக்குறிச்சி , ஏப்.22:** கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நேற்று கள்ளக்குறிச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகலில் இருந்து சுமார் 500 எள் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஆனால் எள் மூட்டைகளை கொள்முதல் செய்ய வியாபாரிகள் முன்வராமல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஆத்திரமடைந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடம் முன்பு கள்ளக்குறிச்சி-கச்சிராயபாளையம் சாலை பகுதியில் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்ததும் கள்ளக்குறிச்சி இன்ஸ்பெக்டர் உதயகுமார் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளிடம் சுமூகமாக பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததையடுத்து சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

பின்னர் ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலகத்தில் தானியங்களை கொள்முதல் செய்யாமல் போராட்டத்தில் ஈடுபட்ட வியாபாரிகளை அழைத்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜோதிபாசு ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் வெங்கடேசன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது வியாபாரிகள், இந்த வளாகத்தில் தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டு வந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முழுமையாக புதிய கட்டிடத்துக்கு மாற்றப்பட்டுவிட்டது. இதையடுத்து வியாபாரிகள் பயன்படுத்தும் வகையில் தனியாக அறை தேவைப்படுகிறது. மேலும் வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் இருந்து வருகிறது. அதனை சரிசெய்து கொடுக்க வேண்டியும், இரவு நேரங்களில் மின்விளக்கு இல்லாததால் மூட்டைகள் பிடிக்கவோ அல்லது மூட்டைகளை ஏற்றவோ முடியாத நிலை ஏற்படுகிறது.

இதனை சரிசெய்து கொடுக்க வேண்டி நிர்வாகத்திடம் பலமுறை தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என புகார் எழுப்பினர். வியாபாரிகளின் கோரிக்கைகளை விரைந்து நிவர்த்தி செய்து கொடுப்பதாக போலீசார் முன்னிலையில் அதிகாரிகள் உறுதியளித்தனர். இதையடுத்து வியாபாரிகள் போராட்டத்தை கைவிட்டு விவசாயிகள் கொண்டு வந்த எள் மூட்டைகளை கொள்முதல் செய்தனர். விவசாயிகள் சாலை மறியல் மற்றும் வியாபாரிகள் போராட்டம் காரணமாக கள்ளக்குறிச்சியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# பைக்காரா, பார்சன்ஸ்வேலி வனப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் 120 ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசம்



**ஊட்டி,ஏப்.22:** பார்சன்ஸ் வேலி அணைப்பகுதியில் தொடர்ந்து எரியும் காட்டுத் தீயால் 120 ஏக்கர் வனப்பகுதி நாசமாகியுள்ளது. நெருப்பை கட்டுப்படுத்த வனத்துறையினர் தீவிரமாக போராடி வருகின்றனர். வனப்பரப்பு மிகுந்த நீலகிரி மாவட்டத்தில் டிசம்பர் முதல் பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் உறைபனி பொழிவு நிலவும்.

இதனால் வனப்பகுதிகளில் பசுமை குறைந்து செடி,கொடிகள் காய்ந்து காணப்படும். மார்ச் துவங்கி மே வரை கோடை காலம் என்பதால் வறட்சியான காலநிலை நிலவும்.

இந்நிலையில் இந்த ஆண்டு சமவெளி பகுதிகளுக்கு நிகராக நீலகிரியிலும் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் வனப்பகுதியில் வறட்சி நிலவுகிறது.

புல்வெளிகள் மற்றும் புதர்கள் காய்ந்து காணப்படுவதால், காட்டுத் தீ பரவும் அபாயம் நீடித்தது. வனத்துறையினரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வனத்துறை சார்பில் தீத்தடுப்பு கோடுகள் அமைக்கப்பட்டது.

இந்நிலையில் நீலகிரி வன கோட்டத்துக்கு உட்பட்ட கிளன்மார்கன் வனப்பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பரவிய காட்டு தீ சிங்காரா வரை சென்று பல ஏக்கர் வனப்பகுதி பாதிக்கப்பட்டு உள்ளது. காட்டு தீயை கட்டுப்படுத்த முடியாமல் வனத்துறையினர் திணறி வருகின்றனர்.

4 நாட்களாக இரவு முழுவதும் கொழுந்துவிட்டு எரிந்த தீயில், 120 ஏக்கர் பரப்பளவிலான வனப்பகுதி சாம்பலானது.

பொசுக்கும் வெப்பம், மூச்சைத் திணறடிக்கும் புகை என எதையும் பாராமல், பசுந்தழைகளை கொண்டு தீயை அணைத்து வருகின்றனர்.

இது குறித்து வனத்துறையினர் கூறுகையில், "கடும் வெப்பம் காரணமாக தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம். மர்ம நபர்கள் நடமாட்டம் இந்த பகுதியில் இல்லை. 90 சதவீதத்திற்கும் அதிகமான தீ அணைக்கப்பட்டு விட்டது. விரைவில் காட்டுத் தீ முழுவதும் அணைக்கப்பட்டு விடும்" என்றனர்.

# பேரனிடமிருந்து வீட்டை மீட்டுதரக்கோரி தாலுகா அலுவலகத்தில் தஞ்சமடைந்த வயதான தம்பதி



காரைக்கால் : காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு பகுதியில் உள்ள குரும்பகரம் கொட்டப்பாக்கம் பகுதியில் எல்.ஜி.ஆர் பகுதியை சேர்ந்தவர் சூசைநாதன் (90). இவரது மனைவி சம்மனசு மேரி(85). இவர்கள் கடந்த 1984 ஆம் ஆண்டு அதே பகுதியில் பட்டா இடம் ஒன்று வாங்கி அதில் வீடு கட்டி வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இதில் மூத்த மகன் இறந்த நிலையில் அவரது மகன் ஜிஸூ ஆண்டனி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டு தாத்தா பாட்டி உடன் வந்து வாடகை வீடு கிடைக்கும் வரை தங்களிடம் தங்கிக் கொள்கிறோம் என்று தஞ்சமடைந்துள்ளார்.

பின்னர் நாளடைவில் பேரன் ஜிஸூ ஆண்டனி வீடு தனக்கு சொந்தம் என்று தனது தாத்தா பாட்டியை அவ்வபோது அடித்து விரட்டி உள்ளார். இது குறித்து போலீசாரிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் இருந்த நிலையில் கடந்த வாரம் முதியவர்களை பலமாக தாக்கி வீட்டை விட்டு விரட்டியுள்ளார்.பின்னர் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் மன்றத்தில் மாவட்ட எஸ் எஸ் பி லட்சுமி சௌஜன்யாவிடம் முதியோர் தம்பதிகள் புகார் கொடுக்கப்பட்டது.

இது குறித்து விசாரணை செய்ய உத்தரவிட்டார். மேலும் முதியவர்கள் நெடுங்காடு காவல் நிலையத்தில் வரவழைக்கப்பட்டபோது, முதியோர்களிடம் அந்த வீட்டை எழுதி கேட்டு கட்டப்பஞ்சாயத்து செய்து டார்ச்சர் செய்து உள்ளார்கள். இதனை அடுத்து மீண்டும் வயதான தம்பதியினர் காரைக்கால் தாலுகா அலுவலகத்தில் நேற்று தஞ்சமடைந்தனர்.

தங்கள்வீட்டைமீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் மருந்து குடித்து தற்கொலை செய்து கொள்ள போவதாகவும் வேதனை உடன் தெரிவித்தனர்.

மேலும் இது குறித்து வயதான தம்பதியினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் தற்போது புகார் கொடுத்துள்ளனர். காவல்துறை உரிய விசாரணை செய்து முதியவர்களுக்கு அவர்களுக்கு சொந்த வீட்டை மீட்டு தர வேண்டும் என்பதே கோரிக்கையாக உள்ளது.

# 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி ஊட்டி ஏரியில் படகு போட்டி



**ஊட்டி, ஏப்.22:** 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி ஊட்டி ஏரியில் படகு போட்டி நடந்தது. சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக இளம் வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் நீலகிரி பூச்சிப்பிடிப்பான் (நீலகிரி பிளை கேட்ச்சர்) சின்னம் வெளியிடப்பட்டுள்ளது.

சின்னத்துடன் மலையின் குரல், நம் வாக்கு! என்ற விழிப்புணர்வு வாசகம் இடம் பெற்றுள்ளது. சின்னத்திற்கு நீலா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலின் போது வாக்குப்பதிவு குறைந்த ஊட்டி தொகுதியில் 5 வாக்குச்சாவடிகள், கூடலூர் தொகுதியில் 2 வாக்குச்சாவடிகளிலும், குன்னூர் தொகுதிகளில் 6 வாக்குச்சாவடிகளிலும் என 13 வாக்குச்சாவடிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டன.

இதுதவிர அனைத்து பகுதிகளிலும் ரங்கோலி கோலம், சிலம்பாட்டம், விழிப்புணர்வு சைக்கிள் பேரணி, கலாச்சார நிகழ்ச்சிகள், மாரத்தான் ஓட்டம், கிரிக்கெட் போட்டி, ஓவியம், கட்டுரை போட்டிகள், பழங்குடியின கிராமங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி ஊட்டி படகு இல்லத்தில் பெண்களுக்கான படகு போட்டிகள் நடந்தது. இதில் விதவிதமாக விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி படகு போட்டியில் பங்கேற்றனர்.

தொடர்ந்து ரங்கோலி கோலம் வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து மண்பாண்ட கலைஞர் சுகனேஷ்வரன் தயாரித்த களிமண்ணால் உருவாக்கப்பட்ட நீலகிரி பிளை கேட்சர் மற்றும் வரையாடு, யானை உள்ளிட்டவற்றை கொண்ட பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இதில் தேர்தல் விழிப்புணர்வு அலுவலர் ராஜேஷ்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# கள்ளக்காதலுக்கு இடையூறாக இருந்த தொழிலாளியை கொன்ற மனைவி உள்பட 3 பேருக்கு ஆயுள் தண்டனை

**கரூர், ஏப்.22:** கரூர் மாவட்டம் எம்.வெள்ளாளப்பட்டி கீரிக்கல் பாதையில் தங்கவேல் என்பவரது தோட்டத்தில் தூத்துக்குடி மாவட்டம் கொப்பம்பட்டியை சேர்ந்த தொழிலாளியான சுப்புராஜ் (வயது 43) என்பவர் கடந்த 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ந்தேதி கொலை செய்யப்பட்டு கிடந்தார். இதுகுறித்து பசுபதிபாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், சுப்புராஜ் மனைவி அம்மு என்கிற அழகுலட்சுமிக்கும், கரூர் மாவட்டம் எஸ்.வெள்ளாளப்பட்டி நரிக்கட்டியூர் பகுதியை சேர்ந்த கனகராஜ் (36) என்பவருக்கும் கள்ளக்காதல் இருந்துள்ளது. இதற்கு சுப்புராஜ் இடையூறாக இருந்துள்ளார். இதனால் அழகுலட்சுமி, கனகராஜ் மற்றும் இவர்களுக்கு உடந்தையாக ஜெயலலிதா (60) ஆகியோர் ஒன்று சேர்ந்து சுப்புராஜை கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து அவர்களை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கு தொடர்பான விசாரணை கரூர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில் வழக்கு விசாரணை முடிந்து நேற்று நீதிபதி இளவழகன் தீர்ப்பு வழங்கினார்.

இதில் கனகராஜுக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், ரூ.2 லட்சம் அபராதமும், அம்மு என்கிற அழகுலட்சுமி மற்றும் ஜெயலலிதாவுக்கு ஆயுள் தண்டனையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

இந்த தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிட்டார். இதனையடுத்து குற்றவாளிகள் திருச்சி மத்திய சிறை மற்றும் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# பொள்ளாச்சியில் இருந்து இறக்குமதி செய்வதால் செங்கல்பட்டில் இளநீர் விலை கிடுகிடு உயர்வு

## ரூ.100க்கு விற்பனை; பொதுமக்கள் அதிர்ச்சி



**செங்கல்பட்டு, ஏப்.22:** செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளூர் வரத்து குறைந்து, பொள்ளாச்சியில் இருந்து இளநீர் இறக்குமதி செய்யப்படுவதால் இளநீர் விலை கிடுகிடுவென வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. ஒரு இளநீர் ரூ.100க்கு விற்கப்படுவதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் கடந்த 20 நாட்களுக்கும் மேலாக கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. இதனால் தாகத்தைத் தணிக்க உதவும் இளநீர், மோர், கூழ், தர்பூசணி, பழஜூஸ் ஆகியவற்றின் விற்பனை களை கட்டியுள்ளது. இந்நிலையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் இளநீரின் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்த இளநீர் விலை திடீர் உயர்வு பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் நகரின் உட்புறச் சாலைகளில் இளநீர் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இருப்பினும் விலையைக் கேட்டாலே பொதுமக்களுக்கு தலை சுற்றுகிறது. 40 ரூபாய்க்கு விற்கப்பட்ட இளநீர் தற்போது 80 ரூபாய்க்கும், 50 ரூபாய்க்கு விற்கப்பட்ட பெரிய அளவிலான இளநீர் தற்போது 100 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை உயர்வு குறித்து செங்கல்பட்டு பரனூர் சுங்கச்சாவடி பகுதியில் கடை வைத்துள்ள வியாபாரிகள் கூறுகையில், செங்கல்பட்டு சுற்றுவட்டாரப் பகுதிகளில் நாட்டு இளநீர் வரத்து பாதியாக குறைந்துவிட்டது.

தென்னை மரங்களில் ஏறி இளநீர் பறிக்கும் தொழிலாளர்கள் போதிய அளவில் கிடைக்காததால், உள்ளூர் இளநீரை சந்தைப்படுத்துவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. உள்ளூர் இளநீர் வரத்து இல்லாத காரணத்தால் தற்போது பொள்ளாச்சியில் இருந்து இளநீர் லாரிகள் மூலம் கொண்டு வரப்படுகிறது. நீண்டதூர போக்குவரத்து செலவு மற்றும் கூடுதல் கூலி காரணமாக இளநீர் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

சுட்டெரிக்கும் வெயிலில் தாகத்தை போக்க இயற்கை பானமான இளநீரை நாடி வரும் சாமானிய மக்கள், ஒரு இளநீரின் விலை 100 ரூபாயை எட்டியுள்ளதால் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இளநீர் விலை உயர்வால் அதன் விற்பனை ஓரளவிற்கு பாதிக்கப்பட்டாலும், வெயிலின் உக்கிரம் காரணமாக வேறு வழியின்றி மக்கள் அதிக விலை கொடுத்து இளநீர் வாங்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.




# பிரேமலதா நமது கூட்டணிக்குத்தான் வேலை செய்கிறார்- அன்புமணி

**சேலம், ஏப்.22:** சேலம் மாவட்டம் எடப்பாடியில் 2-வது நாளாக எடப்பாடி பழனிசாமி உடன் இணைந்து அன்புமணி ராமதாஸ் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது:-

விஜயகாந்த் கட்சி தொடங்கியதே திமுகவை எதிர்த்துதான்; அந்தக் கூட்டணியில் பிரேமலதா விஜயகாந்த் இருக்கிறார்; ஆனால், பிரேமலதா நமது கூட்டணிக்குத்தான் வேலை செய்கிறார்; அதில் சந்தேகமே வேண்டாம். திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றப்படும் எனவும் பிரேமலதா பேசியுள்ளார்.

தமிழகத்தில் தீய திமுக ஆட்சியை அகற்றிவிட்டு அதிமுகவின் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும்; இன்னொரு முறை திமுக ஆட்சிக்கு வந்தால் பெண்கள், குழந்தைகளை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது. திமுகவின் தோல்விகளும் துரோகங்களும் மோசடிகளும் உலக வரைபடத்தின் பரப்பளவை விட நீளமானவை.

தாய்மார்களே, பெண்களே, பெற்றோர்களே திமுகவிற்கு ஓட்டு போடாதீர்கள். ஒரு ஓட்டு கூட திமுகவுக்கு போட கூடாது என தாய்மார்களின் பாதம் தொட்டு கேட்கிறேன். பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத திமுக ஆட்சியை தூக்கி வீசுங்கள். தபால் வாக்கு செலுத்திய 90 சதவீதம் பேர் அதிமுகவுக்கு வாக்களித்திருப்பதாக தவெலக வெளியாகி உள்ளது. அதிமுக கூட்டணி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று மக்கள் பேராதரவுடன் ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# அதிமுக முழுமையாக பாஜகவின் பிடியில் சிக்கியுள்ளது: அரவிந்த் கெஜ்ரிவால்

**சென்னை, ஏப்.22:** சென்னையில் டெல்லி முன்னாள் முதல்-மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

தமிழ்நாட்டு மக்கள் பாஜகவின் பிளவுவாத அரசியலை வெறுக்கிறார்கள். மக்கள் பாஜகவை வெறுக்கின்றனர். இந்தியாவில் மிக மோசமான ஊழல் கட்சி என்றால் அது பாஜகதான். பாஜக ஆட்சியில் முன்னேறிய ஒரே ஒரு மாநிலத்தை காட்ட முடியுமா?. 30 ஆண்டுகளாக பாஜக ஆட்சியில் உள்ள குஜராத்தில் சாலைகள் படுமோசமாக உள்ளன.

அதிமுக முழுமையாக பாஜகவின் பிடியில் சிக்கியுள்ளது. அதிமுகவுக்கு வாக்களித்தால் தமிழ்நாட்டின் வளர்ச்சி தடைபடும். பாஜகவிற்கு ஒரு எம்.எல்.ஏ. கிடைத்தாலும் அக்கட்சியை சேர்ந்தவரே முதல்-அமைச்சராக பதவி ஏற்பார். வாரிசு அரசியலை விமர்சனம் செய்யும் பாஜகவினர் தங்களது பிள்ளைகளை என்ன செய்கிறார்கள் என பார்க்க வேண்டும். பாஜக கட்சி வெற்றி பெறக்கூடாது என தமிழக மக்கள் நினைக்கின்றனர்.

தேசிய அளவில் மு.க.ஸ்டாலினின் குரல் மிகவும் வலிமையானதாக பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டு மக்கள் திமுக ஆட்சியில் மிக திருப்தியாக உள்ளனர். காலை உணவுத் திட்டத்தை பஞ்சாபில் செயல்படுத்த திட்டமிட்டு வருகிறோம். திமுக அரசு கல்விக்கான திட்டங்களை அதிகளவில் செயல்படுத்தி வருகிறது. இந்தியாவிலேயே அதிக தொழில் முதலீட்டை தமிழ்நாடுதான் ஈர்த்துள்ளது. கடந்த முறையை விட அதிக பெரும்பான்மையுடன் திமுக வெற்றி பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

# "விசில் புரட்சிக்குத் தயாராகுங்கள்..!"- தமிழக மக்களுக்கு த.வெக தலைவர் விஜய் கடிதம்

தமிழக சட்டமன்ற தேர்தலில் விசில் சின்னத்திற்கு வாக்கு கேட்டு தமிழக மக்களுக்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து தவெக தலைவர் விஜய் கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

என் நெஞ்சில் குடியிருக்கும் என் சொந்தங்களாகிய தமிழக மக்கள் அனைவருக்கும் வணக்கம். ஆசையோடும் அன்போடும் எனக்காக எல்லாவற்றையும் அள்ளி அள்ளித் தந்த உங்களோடு உங்கள் விஜய் மனம்விட்டுப் பேசவே இக்கடிதம்.

நமது அரசியல் எதிரியான மக்கள் விரோத தீயசக்தி திமுகவும் கொள்கை எதிரியான மற்றும் பலருடன் களம் காணும் பிளவுவாத சக்தியான பாஜகவும் என்று நம் மக்களே அறிவர்.

மக்களுக்காக அவர்தம் நலன்களுக்காக மட்டுமே அரசியலுக்கு வந்த இந்த விஜய், பாசிச மனநிலை கொண்ட ஜனவிரோதக் கட்சிகளின் அழுத்தங்களுக்கா அடிபணிவான்?. திசைதிருப்பல் முதலீட்டுக் கழகங்களின் நெருக்கடிகளுக்கும் நிர்பந்தங்களுக்கும் குனிந்து கூழைக் கும்பிடா போடுவான்?. ஆதாயங்களைக் காட்டி உங்கள் மகனை அடக்கிவிடவும் முடியாது. அதிகாரங்களை ஏவி உங்கள் சகோதரனை மிரட்டி விடவும் இயலாது.

இறைவன் அருளால் இயற்கையின் துணையுடன் மாபெரும் பெண்கள் சக்தி, மாபெரும் இளைஞர் சக்தி, மாபெரும் மக்கள் சக்தியுடன் உலகெங்கும் உள்ள நமது தோழர்களின் பேராதரவுடன் முதன்மை அரசியல் சக்தியாகக் களத்திற்கு வந்திருக்கும் தமிழக வெற்றிக் கழகத்தின் தமிழக மக்கள் நலன் சார்ந்த நோக்கத்தையும் அதன் தாக்கத்தையும் எந்தக் கொம்பனாலும் அசைக்க முடியாது என்பதை வரும் தேர்தலில் நம் மக்களே அவர்களுக்கு சரியான பாடம் புகட்டி உணர்த்துவர்.

நம்மை எள்ளி நகையாடியக் கூட்டம் மட்டுமன்று, இந்த நாடே அறியும், அளக்கமுடியாத ஆழ்கடல் - விலக்க முடியாத விரிவானம் த.வெ.க என்று. நேர்மையின் நெருப்புக்கோளம் - மக்களின் நெஞ்சில் நீக்கமறக் குடியிருப்பது த.வெ.க என்று. சமூகநீதிக் காவலரண் - ஜனநாயகப் பேரரண் த.வெ.க என்று.

பணத்தை மட்டுமே நம்பி தத்தம் சுயலாபங்களுக்காக அரசியல் களமாடும், எதிர்வரும் நம் தலைமுறையின் கனவுகளை அடகு வைக்கத் துடிக்கும் அடிமை அரசியல் சூதாடிகளின் வேறு எந்தச் சின்னத்திற்கு நீங்கள் வாக்களித்தாலும், பிளவுவாத சக்திகளுக்கான மறைமுக அல்லது நேரடி ஆதரவாக மட்டுமே அது மாறும்.

ஆகவே, எப்போதும்போல அடைமழையாக இந்த அரசியல் சூதாடிகளின் ஊழல் லஞ்சக் கொள்ளைப் பணமழை பொழிந்தாலும் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி அன்று, நீங்கள் அனைவரும் திருவிழாக் கோலம் பூண்டு, விசில் புரட்சிக்குத் தயாராகி, குடும்பம் குடும்பமாக சென்று வாக்களிக்க வேண்டிய, எவ்வித மறுசிந்தனைக்கும் இடம் தராத ஒற்றைத் தேர்வாக "விசில் சின்னம்" மட்டுமே இருக்க வேண்டும் என உங்களை இருகரம் கூப்பி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

வாகை சூடுவோம்.

வரலாறு படைப்போம்.

வெற்றி நிச்சயம்..

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM